சிவமயம்

குமரகுருபரன்



மலர் 15] 1964-௵ மாசி-௴ 1௳ 13-2-64 [இதழ் 2

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. ஆ. சி. ஷண்முகநயினார் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா.
20, நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை - 6.
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

		பக்கம்
1.	சிதம்பரச்செய்யுட்கோவை (கட்டுரை 77) ...	89
2.	திருமந்திரம் ஐந்தாம் தந்திரம். (Tirumantiram Tantra the fifth) ...	95
3.	ஓம் சக்தி ...	99
4.	அப்பர் சுவாமிகளின் அற்புதத் திருப்பதிகங்கள் (ஆங்கில மொழிபெயர்ப்பு)	105
5.	திருவருட்பயன்—தெளிவுரை ...	107
6.	Hymns of the Tamil Saivite Saints	110
7.	திருநின்றியூர் ...	111
8.	இராமலிங்க சற்குருபுலம்பற் கண்ணி	120
9.	நீதிநெறிவிளக்கம் (உரை நடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்) ...	121
10.	அப்பருக்கன்பர் ...	125
11.	தாயுமானவரின் - பராபரக்கண்ணிகள். பொழிப் புரையும் ஆங்கிலமொழி பெயர்ப்பும்	133
12.	திருப்பனந்தாளில்—பிரதோஷக் கட்டளை நிதி ...	134

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 15 ‖ சோபகிருது-ஞூ மாசித் திங்கள் 1-ம்வ [13-2-64] ‖ இதழ் 2

சிதம்பரச் செய்யுட் கோவை

தொண்டைமண்டலாதீனம் குருமகா சந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,
காஞ்சிபுரம்.

[கட்டுரை 77]

சிதம்பரச் செய்யுட்கோவையுள், 'பாவும் பாவினமும்' என்னுந்திறத்துள், இதுகாறும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா என்பவும் அவற்றின் இனமும் வஞ்சிப்பாவும் ஆயின. இனி வஞ்சியினம் இதில் அறியப்படும். பாவினத்துள் தாழிசை, துறை விருத்தம் என மூவகை உண்டு.

1. ‌ ‌ ‌ ‌ । பிணியென்று பெயராமே
துணிநின்று தவஞ்செய்வீர்

அணிமன்ற லுமைபாகன்
மணிமன்று பணியீரே.

2 என்னென்று பெயராமே
கன்னின்று தவஞ்செய்வீர்
நன்மன்ற லுமைபாகன்
பொன்மன்று பணியீரே.

3 அரிதென்று பெயராமே
வரைநின்று தவஞ்செய்வீர்
உருமன்ற லுமைபாகன்
திருமன்று பணியீரே.

இது குறளடி (இருசீர்அடி) நான்காய் ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கி வந்த வஞ்சித் தாழிசை.

இதில் உள்ள முதற்சீர்களில் முதற் சொற்களே வேறு படுவன. மற்றெல்லாம் மும்முறை வந்த சொற்களே ஆதலை அறியலாம். பிணி, துணி, அணி, மணி என்பவும், என், கன், நல், பொன் என்பவும், அரிது, வரை, உரு, திரு என்பவும் வேறு சொற்கள். அவற்றை விட்டு அடிகளில்மற்றவற்றைக் காணின் அவை ஒன்றுபடுதல் நன்று தெரியும். பிணியென்று பெயராமே என்ற தன் கருத்தே ஏனைய இரண்டடுக்கின் முதலிலும் நிற்கின்றது. அவ்வாறே மற்றைய அடிகளிலும் ஆம். பிணியென்று பெயர்தல், என் என்று பெயர்தல், அரிது என்று பெயர்தல் மூன்றும் தவத்தை விடுதற்கு ஏதுவாகும். அவற்றுள் பிணி தவத்தைக்கைவிடற்கு அநுகூலமானது. என் என்று பெயர்தல் ஒரு பயனும் இல்லை என்றது அன்று. (1) தவத்தின் அருமையை வியந்தும் (2) அச்செயற்கு அரிய தவத்தைச் செய்யமாட்டாத எளிமையை நினைந்தும் அத்தவத்தைக் கைவிடலைக் குறிப்பது. அரிது என்று பெயர்தல் (1) தவத்தருமை (2) தவஞ்செய்தலினருமை என்றவற்றுள், பின்னதைக் குறித்து, தவத்தை முற்றச் செய்யாது இடைவிட்டு நீங்குதலாகும்.

துணி, கன், வரை என்னும் சொல் மூன்றும் ஈண்டுக் கற்பாறையைக் குறித்து நின்றன. கற்றுணி—கற்பாறை.

1. 'கன்னடைந்த மதிற் பிரமபுரத்துறையுங் காவலனே' என்றருளிய திருஞானசம்பந்தர் திருவாக்கிலும் 'கன்' என்றது 'கல்' என்ற பொருட்டாய் நிற்றல் காண்க. அதனைத் தருமையாதீனத்து வெளியீடாக வாந்த எம் (தேவாரக்) குறிப்புரையிற் கண்டு போற்றினுரும் சிலர் உளர். திருக்கோளிலித் திருக்கடைக் காப்பில் வரும் 2. கன்னவிலும் மால்வரையான் கார்திகழும் மாமிடற்றன்; 3. 'கன்னெடிய குன்றெடுத்தான் தோளடரக் காலூன்றி'; என்பவற்றிலும் 4. 'கன்னெடுமால் வரைக்கீழ் அரக்கன் இடர்கண்டானும்'; என்பவற்றிலும் தேவாரத்தில் வரும்

5 "கன்னெடுங் காலம் வெதும்பிக் கருங்கடல் நீர்சுருங்கிப்
பன்னெடுங் காலம் மழைதான் மறுக்கினும் பஞ்சமுண்டென்(று)
என்னெடும் தளறும் அஞ்சல்நேஞ் சேயிமை யாதமுக்கண்
பொன்னெடுங் குன்றமொன் றுண்டுகண் டீர்இப் புகலிடத்தே"

என்பதன் முதற்றொடரிலும்,

கல் என்று பிரித்துக் கூறலாம். முதலாவது எடுத்துக் காட்டுள் கல்நடைந்த என்று பிரிக்கலாமோ? இக்கோவைப்பாடலில், கல் + நின்று என்றும் கன் + நின்று என்றும் பிரிக்கலாம். பொல் பொன், கொல்—கொன் என்பனவும் அவைபோல்வனவும் லகர மெய்யீற்றுமெய்கள் னகர மெய்யீற்றனவாக திரிந்தன. எள்—எண் பெள்—பெண், ஆள்—ஆண் என்பனவும் அவைபோல்வனவும் ளகரவீறு ணகரவீருயின. கற்றூண் என்றது கற்றுணி என்னும் பொருளதே. தூண் என்பது துண் என்பதன் நீட்சியே; உண் என்பது ஊண் என நீண்டது போல்வது அது. துண் என்னும் முதனிலையே தூணி, துண்டு, துண்டம் தூண் என்பவற்றின்கண் உளது. ஒரு பொருள்மேல் வாராததும் துணிந்து நின்று என்பது பிழையென்று காட்டும். கல் – மலைப்பிரதேசம் என்றதும் செவ்விது அன்று. துணி நின்று என்றதற்குத் துணிந்து நின்று என்று சிதம்பரராமலிங்கம் பிள்ளை யெழுதியது பொருந்தாது.

துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு தவஞ் செய்பவர்களே, இவ்வளவு துயர் இன்றி எளிதிலே பயன்பெறும் வழி இஃது ஆகும் என்பது தமிழ்த் தெய்வத்தின் குறிப்பு. இதுவே இத்தாழிசையின்

உட்கோள். இதில் துன்பம் துயர் என்றது பிற்கால வழக்கை யொட்டியது.

முற்காலத்தில் துன்பமும் துயரமும் ஒன்ருகக் கொள்ளப் படவில்லை.

"உயிர்நிலை யுடம்பே காலா உள்ளமே தாழி யாகத்
துயரமே ஏற்றம் ஆகத் துன்பக்கோ லதனைப் பற்றிப்
பயிர்தனைச் சுழிய விட்டுப் பாழ்க்குநீர் இறைத்து மிக்க
அயர்விஞல் ஐவர்க்கு ஆற்றேன் ஆரூர் மூலட்ட னீரே."

என்னுந் (தேவாரத்) திருநேரிசையில் துயரம் வேறு துன்பம் வேருகக் கூறுதல் காண்க.

2. "பொன்செய் மன்றில்வாழ்
கொன்செய் கோலத்தான்
மின்செய் தாள்தொழார்
என்செய் கிற்பரே."

என்பது குறளடி நான்காய் வந்த வஞ்சித்துறை. இதிற்பொன் செய்மன்று என்றது பொன்மன்று எனப்படும் கனக சபையை. கொன்செய் கோலம் என்றது மஹா தாண்டவம் புரியும் நடராஜ ருபத்தை. கொன்-பெருமை, மஹத்தை யுணர்த்தும் சொல்லாக ஆண்டது தாண்டவத்தின் பெருமையைக் குறிக்க. ஆநந்த தாண்டவமே மஹா தாண்டவம், மற்றெல்லாம் அதற்கு உட் பட்டனவே. காளியைப் பராசத்தி என்றதுபோல ஏனைய தாண்ட வங்களையும் மஹா தாண்டவம் என்றெழுதுவதும் பேசுவதும் உண்டு. மின்செய்தாள் என்றது (ஆட எடுத்திட்ட பாதம் ஆகிய) குஞ்சிதபாதத்தை. அதுவே தொழுவாரைப் பேரின்பம் நுகர ஆட்கொள்ளும் பெருமையது. உலகப்பற்றில் ஊன்றி நிற்பார்க்கே ஊன்றிய திருவடி வழிபாடு உரியது. தொழார் என்செய்கிற்பர் என்றது, நடராஜப் பெருமானைத் தொழாதார் யாதும் செய்யவல்லர் அல்லர்; உண்டும் உறங்கியும் கண்டும் களித்தும் பொழுது போக்குவதில் மட்டும் வல்லராவர் என்ற வாறு. தொழா (இ)த்துறையில் இறங்குவார் முத்திக் கரை யேருர். தொழுவாரே பிறவிப்பெருங்கடல் நீந்த வல்லவர்.

3. [4]ஒன்றி னம்[3]பர லோகமே
[5]ஒன்றி னம்பர லோகமே
[2]சென்று [1]மேவருந் தில்லையே
[6]சென்று மேவருந் தில்லையே

இது சிந்தடி (முச்சீரடி) நான்காய் வந்த வஞ்சிவிருத்தம்.

இதற்குச் சிதம்பர ராமலிங்கம் பிள்ளை குறிப்புரை இது:—

(1) 'பாவிகள் செல்லுதற்கு அரிய சிதம்பரத்தை. (2) அடைந்தோம். (3) சிவலோகத்தை. (4) அடைந்தோம் ஆயினேம். (5) இன்னும் வேறு உலகம் ஒன்றின்கண். (6) சென்று வருந்துதல் இல்லை.'

தமிழ்த் தெய்வத்தின் அமிழ்த மொழி:— (1) மேவரும் தில்லை (2) சென்றும் – (1) யாவரும் மேவுதற்கு அரிய தில்லைத் தலத்தின் கண் (2) சென்றேம். (ஆதலின்) (3) பரலோகமே (4) ஒன்றினம் – (3) எல்லாவற்றிற்கும் (3) மேலான உலகமாகிய முத்தியினிடத்தே (4) பொருந்தினேம் ஆயினேம். (5) இனம் (6) பரலோகம் (7) ஒன்று – (5) இன்னும் (6) வேறு உலகம் (7) ஒன்றின் கண். (8) சென்றுமே (9) வருந்து (10) இல்லை – (8) சென்று (9) வருந்துதல் (10) எம்பால் இல்லை.

இவற்றின் வேறுபாட்டையும் உரைச் சிறப்பையும் வாசிப்போர் அறிந்தின்புறுவாராக. 'உணர்ந்தார்க் குணர்வரியோன் தில்லைச் சிற்றம்பலத் தொருவன்' என்னும் திருக்கோவை யடியால் முதலுரை பொருந்தாமையைக் காண்க.

இனம் (இன்னம்) என்றது இனியும் என்றதன் மரூஉ. இனி இனி என்றது இன்னினி என மருவியதும் அறிக. 'இன்னம்' என்றுதான் இருத்தல் வேண்டும். இன்னும் என்றது பிழை வழக்கு என்பார் உளர். இனியம் என்றிருந்து இன்னம் என மருவிய தேல் அவர் வழக்கு ஏற்பதே. முன்னம் பின்னம் இன்னம் சின்னம் பென்னம் என்று அம்மீற்றுச் சொல்லாகக் கொள்ளும் முறையில் 'இன்னம்' என்பதும் உண்டு. அதுவும் இனியும் என்பதன் மரூஉ ஆகிய இன்னும் என்பதும் வேறு.

இங்குப் புலவர்க்கு விருந்தாக ஒன்று காட்டுதும். அதில் வரும் 'இன்னும்' என்பது இன்னும் திருத்தப்படாமல் இருக்கின்றது. அஃது ஆட்டு நெறியினை ஒத்த செலவாகும்.

"பண்டும் ஒருகாற்றன் பைந்தொடியைக் கோட்பட்டு
வெங்கடம் வில்லேற்றிக் கொண்டுழந்தான்—தென்களந்தைப்
பூமான் திருமகளுக் கின்னும் புலம்புமால்
வாமான்றேர் வையையார் கோ"

என்பது யாப்பருங் கலத்திலும் யாப்பருங்கலக்காரிகையிலும் காட்டியுள்ள பாடல். கலத்தில் 'இன்னம்' எனத் திருத்தியுளது. காரிகை 'இன்னும்' மாறிலன். இப்பாடலில் 'இன்னும்' என்றோ 'இன்னம்' என்றோ இருப்பது பிழை. இன்றும் என்றே இருத்தற் பாலது. இன்றேல், 'பண்டும்' என்றதற்கு மறுதலையாகிப் பொருட் சிறப்புறுதல் கெடும். பண்டும் உழந்தான் இன்றும் புலம்பும் என்பதே கவியின் கருத்து. வையைக்கோ செயல் சீராமன் செயலை ஒத்தமை குறிப் பதே பாட்டின் பொருட் குறிப்பு. வேங்கடம் என்றது வெம்மைய தாகிய கடம் எனப் பண்புத் தொகைப் பொருளது. அதையும் வேங்கடம் என்று திருத்தினர் ஒருவர். பண்டைய பைந்தொடி சீதாபிராட்டி. இன்றைய திருமகள் தென்களந்தைப் பூமான் புதல்வி. கோட்பட்டவள் பைந்தொடி; கொண்டவன் இராவணன். இராவணன் சீதையைக் கொள்ள இராமன் பட்டதாகப் பாட்டில் அமைந்தது. 'இன்னும்' என்பது இப்படிப் படாத பாடுபடுகிறது.

இக் கோவைச் செய்யுளில், பரலோகம் என்றது மேலுலகு என்றும் வேறுலகு என்றும் இருபொருள் பயந்து நின்றது. 'ஒன்றினம்' என்பது ஒன்றினோம் என வினைமுற்றாயும் இன்னம் ஒன்று எனப்பிரிந்து இரு சொல்லாயும் நின்று பொருள் பயந்தது. சென்றும் மேவரும் தில்லை என்றும் சென்றுமே வருந்து இல்லை என்றும் பிரித்துப் பொருள் கொண்டவாறு அவ் விருரையுட் பின்னுரையிற் காண்க. ஏகாரங்களைப் பொருள் தருவனவாகக் கொள்ளலும் கூடும். பிற்காலத்துக் கவிகளுள் ஏகாரம் அநா வசியமாகப் பயில்வது போல முற்காலத்துக் கவிகளுள் அமைதல் இல்லை. இக்காலக் கவிகட்கு ஏகாரம் உதவுவது போல யாதும் உதவுவதே இல்லை.

தில்லை ஊர். சிதம்பரம் கோயில். கோயிலை அடைவதன் முன், ஊரை அடைந்ததும் (தில்லையின் எல்லையை அடைந்த வுடனே) முத்திஉறும். புத்தி (உலக போகம்) அறும். இத் துணிவை உணர்த்துவதே இதன் உட்கோள். (தொடரும்)

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

இதழ் 15. மலர் 1-ன் தொடர்ச்சி

மார்க்க சைவம்

The Four School of Saivam

6. காதுப்பொன் ஆர்ந்த கடுக்கன் இரண்டுசேர்த்து
ஓதும் திருமேனி உட்கட்டு இரண்டுடன்
சோதனை செய்து, துவாதெச மார்க்கராய்
ஓதி யிருப்பார், ஒருசைவ ராகுமே.

On the lobes of their ear,
They wear the double ring of gold,
Around their necks
They wear the double string of rudraksha;
Their holy body thus adorned
They sit quiescent, chanting mantras
And feel their way inward
Through the twelve steps in the ladder
Of the Souls ascension to Siva
—Of such are one school of Saivas

பொன்னுற் செய்த இரட்டைக் கடுக்கன்களைக் காதிலே அணிந்தவராய், உருத்திராட்ச மாலை இரண்டை உட்கட்டாகப் பூண்ட திருமேனியை, யோக நெறியில் நின்று ஆதார சோதனை செய்து, பிரணவ மந்திரத்தை விடாது ஓதி நிற்போர் ஒருவகைச் சைவ ராவார்,

குறிப்பு:— இது மார்க்க சைவர்களின் இயல்பு கூறியதாகும். மூன்று மடியில் "மார்க்கராய்" என வருவதை நோக்குக. முன்னே ஐந்தாம் பாட்டில் சொல்லப்பட்ட அசுத்த சைவர்கள் சரியை கிரியையோடு அமைந்துவிட, மார்க்க சைவர்கள் யோக நெறியிலே நின்று, மேலே அத்துவா சோதனையில் செல்கின்றனர். மார்க்க சைவம் அத்துவா சைவம் எனவும் படும். மார்க்கம், அத்துவா, வழி என்பவை ஒருபொருளைக் குறிக்கும்.

கடும் சுத்த சைவம்

The School of Kadum Suddha Saivam

7. கண்டங்கள் ஒன்பதும் கண்டவர் கண்டனர்
கண்டங்கள் ஒன்பதும் கண்டாய் அரும்பொருள்
கண்டங்கள் ஒன்பதும் கண்டவர் கண்டமாம்
கண்டங்கள் கண்டோர் கடும்சுத்த சைவரே.

They who transcended the nine spiritual states[1]
Verily saw God, whom the nine continents seek
They saw the Continent beyond all continents
They, indeed, are the Kadum Suddha Saivas

[1]These are known as avastas or states of the soul's experience as it travels from the navel to the forehead through the centres of heart and neck. They represent the states of wakefulness, dream, deep sleep, Beyond-deep-sleep and so on. For a fuller dis cussion vide Saiva Siddhanta by V. Paranjoti. PP 167-69.

ஆன்மாவுக்குரிய ஒன்பது அவத்தை பேதங்களின் எல்லையைக் கண்டவர்கள், ஒன்பது பெரு நிலப்பரப்புகளும் காணத் தேடிக் கொண்டிருக்கும் இறைவனைக் கண்டவர்களாவார்கள். அவர்கள், பெரு நிலப்பரப்புக்களுக்கெல்லாம் அப்பாலான பேரின்பப் பெருநிலப்பரப்பைக் கண்டவர்களாவார்கள். அவர்களே கடும் சுத்த சைவர் எனப்படுவோர்.

குறிப்பு:— கடும் சுத்த சைவர்கள், மார்க்க சைவரினும் தேர்ச்சி பெற்றோராயினும், இறைவனைக் கண்டவரேயன்றி, இறைவனோடு சுத்த சைவர் போன்று கலந்தவரன்று.

ஒன்பது அவத்தைகளை எட்டாம் தந்திரத்துள்,

கேவலத்துள் கேவலம்
கேவலத்துள் சகலம்

கேவலத்துள் சுத்தம்
சகலத்துள் கேவலம்
சகலத்துள் சகலம்
சகலத்துள் சுத்தம்
சுத்தத்துள் கேவலம்
சுத்தத்துள் சகலம்
சுத்தத்துள் சுத்தம்

என்று ஆசிரியர் பிரித்துக் கூறுவர், வேறுவேருகவும் சித்தாந்த நூற்கள் குறிக்கும். வரி-1 கண்டங்கள்– அவத்தை பேதங்கள். வரி-2 கண்டாய் – கண்டு, ஆய் என்று பிரிக்கவும். வரி-2, 3, 4 கண்டங்கள் – பெருநிலப் பரப்புக்கள்.

ஞானி இயல்பு
Characteristics of the Gnani

8. ஞானி புவியெழு நன்னூ லனைத்துடன்
மோன திசையும் முழுஎண்ணெண் சித்தியும்
ஏனை நிலமும் எழுதா மறையீறும்
கோனொடு தன்னையும் காணும் குணத்தனே.

The Gnani masters all sacred lore on earth,
And the siddhies[1] sixty and four
And espies the Land of mona[2]
And all other land besides;
He sees the goal of all scriptures
And Lord and himself in union one.

[1]Siddhies – Miraculous feats. [2]Mona – Divine Silence.

ஞானியானவன், உலகில் தோன்றும் எல்லா அருள் நூற்களையும் உணரவல்லவன்; அறுபத்து நான்கு சித்திகளையும் நிறைவு பெறக் கைவரப் பெற்றவன்; மோன வெளியையும், ஏனைய உலகங்களையும் காண வல்லவன்; மறைகளின் முடிபைத் தெரிபவன். இறைவனையும் தன்னையும் ஒன்றப்பெற வல்லவன்.

சுத்த சைவனும் மார்க்க சைவனும் எங்ஙனம் வேருவர்
Sudha Saiva Contrasted with Marga Saiva

9. பொன்னுற் சிவசாத னம்பூதி சாதனம்
நன்மார்க்க சாதனம்; மாஞான சாதனம்

துன்மார்க்க சாதனம் தோன்ருத சாதனம்:
சன்மார்க்க சாதன மாம்சுத்த சைவர்க்கே.

The golden emblems of Siva,
And the holy smear of ashes
Apt are they the insignia
Of those in Marga Saivam standeth;
But the path of Gnani
Is the path that no evil ever crosseth
That his emblem, the holy path of Sanmarga
So beloved of the Suddha Saiva.

முன்னே (6-ம் பாட்டில்) கூறப்பட்ட சிவ சின்னங்களை உடையவராய், திருநீறணிந்த மேனியராய் விளங்குகின்ருேர், நல்ல மார்க்க சைவத்தினைக் கடைப்பிடிக்கின்றவராவார்கள். ஆனுல் ஞானிகளுக்குச் சின்னமோ என்ருல், தீய நெறி தோன்ருத ஞான நெறியைக் கடைப்பிடித்தல் ஒன்றே யாகும். அது சன்மார்க்கம் எனவும் படும். அதுவே சுத்த சைவ நெறியுமாகும்.

(தொடரும்)

1. திருப்பரங்குன்றம்

இராகம் – தன்யாசி. ஆதி தாளம்.

லகு 1வது அட்சர அரை இடத்திலெடுப்பு.

பல்லவி

ஆனந்தம் உனக்குண்டு அல்லற்படும் மனமே
ஆறுமுக வேலவன் அடியிணை தொழுதால் (ஆனந்)

அனுபல்லவி

தனமும் புகழும் தரணியில் நிலையில்லை
திருவடி ஒன்றே சதமென உணர்ந்தால் (ஆனந்)

சரணம்

இன்பமும் துன்பமும் உலகி னியற்கை
இருவினை யால்வரும் பயனென் றுணர்வாய்
திருமகள் கலைமகள் திருவருள் கைகூடும்
திருப்பரங் கிரிவாசனைப் பாதம் பணிந்தால் (ஆனந்)

திரு. சு. கலியாணசுந்தரம்,
பென்சன் போலீசு மானேசர், பாளையங்கோட்டை,

ஓம் சக்தி

திரு. ஆ. சி. சண்முகநயினூர் அவர்கள் பி. ஏ., பி. எல்.,
அட்வகேட், தென்காசி.

[மலர் 15. இதழ் 1-ன் தொடர்ச்சி]

சிவன் ஒருவனே. அவன் ஒன்பது வடிவங்களாக நடிப்பன்.

" சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழு மீசன்
உவந்தரு ளுருத்திரன்றான் மாலய னென்றி னென்றாய்ப்
பவந்தரு மருவ நாலிங் குருவநா லுபய மொன்று
நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னென்பர். " —சி. சித்தியார்.

சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், திருமால், நான்முகன். இத்திருமேனிகள் ஒன்றிலிருந்து ஒன்றாக முறையே தோன்றும். முதல் நான்கு அருவநிலை. ஐந்தாவது அருஉருவநிலை, பின் நான்கு உருவநிலை. இறைவன் ஆன்மாக்கள் அறிவுக்குப் புலப்படும் பொருட்டு ஒன்பது விதமான திருமேனியை ஒன்றில் ஒன்றாகக் கொண்டு பஞ்சகிருத்தியமாகிய ஆனந்த தாண்டவத்தை நடிப்பன். இவற்றின் சக்திகள்:—

" சத்தியாய் விந்து சத்தியாய் மனோன்மணி தானாகி
ஒத்துறு மகேசையாகி உமை திருவாணி யாகி
வைத்துறும் சிவாதிக்கிங்ஙன் வரும் சத்தி ஒருத்தியாகும்
எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள் "

இவனைப்போல் சத்தி ஒன்றாயிருந்தும் காரிய பேதத்தால் பலவாம். இவன் ஒன்பது பேதமாயும் சத்தி ஏழுபேதமாயும் நின்றதும், ஒன்பது பேதத்திற் சொன்ன சத்தி சிவத்துக்குச் சத்தியாயும் நாதத்துக்கு விந்து சத்தியாயும் சதா சிவ முதலான ஐந்துக்கும் மனோன்மணி முதலான சத்திகள் ஐந்துமாய் நிற்கும்.

பரமேசுவரன் கொண்ட மூர்த்தங்களுக் கெல்லாம் பரமேசுவரியும் அந்தந்த மூர்த்தங்களுக்குப் பொருந்தின சத்தியாய் நிற்பாள். சத்தனுகிய சிவன் யாதொன்றை உண்டாக்க என்று திருவுளங் கொள்கின்ருனே அப்பொழுது அந்தச் சத்திதானே அவைகளை அது அதுவாக உண்டாக்கா நிற்கும்.

சிவனுடனே இரண்டற நிற்கின்ற சத்திதானே நாதம் முதலாய திருமேனிகளைப் பொருந்தா நிற்கும். அச்சிவமும் நாதம் முதலியவற்றைப் பொருந்தின சத்தி பேதங்களைப் பொருந்தும். அதனுலே பிரபஞ்சத்தில் உண்டாக்கப்பட்ட உருவங்கள் எல்லாம் சத்திமயமும் சிவமயமுமாகவே (பெண் – ஆண்) காணப்படும். சிவனுக்குச் சத்தி அவன் விரும்பிய வாறே எல்லாம் ஆகுமாதலின் சத்தி அவனுக்கு மனைவி யென்று சொல்லப்படுகிறது.

இறைவன் கொள்ளும் எல்லாத் திருமேனிகளும் சிவம் சத்தி இரண்டற்கும் பொது வடிவம். இவ்வகையில் சிவம் சத்தியைத் தோற்றுவித்தும் சத்தி சிவத்தைத் தோற்றுவித்தும் இரண்டுங் கூடி உலகுயிர்களைத் தோற்றுவித்து ஒடுக்கியும் நிற்குமாயினும் சிவன் பிரமசாரியாகவும் உமை கன்னியாகவும் பேசப்படுவர்.

“ சிவம்சத்தி தன்னை ஈன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிரம சாரி யாகும் பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் தெரியு மன்றே”

சிவஞான சித்தியார்.

சத்தியுஞ் சிவமுஞ் செய்யும் இச்செயல்களெல்லாம் நம்மனோர் பொருட்டாக நடித்துக் காட்டும் நாடக மாத்திரையேயன்றிப் பிறிதில்லை.

சத்தியும் சிவனும் கூடி இருப்பானேன்? மாணிக்கவாசக சுவாமிகள் இதற்கு விடை கொடுக்கின்ருர். மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் “இரு நிலத்தோர்” யோக நிலையடைந்து அழிவார்கள். போகம் அநுபவிக்கமட்டார்கள். தவிர கலைகளிற் கூறப்பட்ட எல்லாப் பொருள்களும் நிலைமாறும்.

"பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ"

"உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ"

இதனால் சத்தியின் முக்கியத்துவம் விளங்குகின்றது.

சத்தி யென்பது அருட் சத்தியென்றும் அது பராசத்தி, திரோதானசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என ஐவகைப்படுமென்றும் முன்கூறப்பட்டது. சிவஞானமுனிவர் இவ்வாறு விளக்குகின்றார். "உயிர்கட்கு அநுக்கிரக மாத்திரம் குறித்துப் பொதுவகையால் அறிந்தும் அறிவித்தும் நிற்பதாகிய ஞானமொன்றே சிவசத்தியின் சொரூபம். அது பராசத்தி யெனப்படும். அந்த ஞானம் உயிர்கட்கு மல பாகம் வருதற் பொருட்டுச் சிறப்பு வகையால் வியாபரிக்குங்கால் ஒரு கூற்றானே திரோதான சக்தி யென நின்று இச்சாஞானக்கிரியை யென முத்திறப்பட்டு வியாபரிக்குமாகலான் இச்சை கிரியை களும் ஞானத்தின் வேறன்மையால் காரியத்தால் அநேகமாகிய செனனி முதலிய வியாபர சக்திகளெல்லாம் முற்கூறப்பட்ட பராசத்தி ரூபமாகிய ஞானமொன்றான் உளவாவனவேயாகும்"

கா. சுப்பிரமணியபிள்ளை சிவஞானசித்தியார் உரைநடை யில் இதையே கீழ்க்கண்டவாறு கூறுகின்றார். "சிவசத்தியின் வடிவம்யாதெனில் சுட்டிறந்தறிதலாகிய இறைவனது பேரறிவே. அதுவே பராசத்தியெனப்படும். அதுவே மூவகைமாயையினும் பொருந்தி ஐந்தொழிற்கும் வித்தாய காலை ஆதி சத்தியெனப் படும். இதனைப் பராசத்தியின் கூறென்பர், அறிவின் கண் விழைவு, செயல்களுமுளவோவென்றால் அறிவு எவ்வாறுளதோ அவ்வாறே விழைவு செயல்களும் நிகழுமாதலின் அவையெல் லாம் இறைவனது தடையில்லாப் பேரறிவில் அடங்கியனவே"

பராசத்தி பொதுவாக உயிர்களுக்கு அருள்புரிய வேண்டு மெனநிற்பது. திரோதான சத்தியென்பது அநுபவிக்க வேண் டிய விடயங்களிலுள்ள குணதோஷங்களை உயிர்களுக்குத் தெரியவொட்டாமல் மறைப்பது. மறைக்கவில்லையாயின் அநுப

வங்கூடாது. உயிர்களுக்குப் பக்குவம் வரும் பொருட்டு இச் சத்தி தொழில் செய்கிறது. திரோதான சத்தியே ஆதிசத்தியாம்.

இச்சா சத்தி சிறப்பாக உயிர்களுக்கு அருள் புரியவேண்டு மென நிற்பது. அதாவது பக்குவமான உயிரை யறிந்து அருள் புரிய எண்ணுவது.

ஞானசத்தியாவது செய்யவேண்டுவனவற்றையறிவது.

கிரியா சத்தியாவது செய்யவேண்டுவனவற்றைச் செய்வது.

இச்சத்திகள் இறைவனுக்குப் பிரிப்பில்லாத சத்திகளே. இறைவன் தான் இயங்காமலிருந்து கொண்டு இச்சத்திகளை இயக்குவித்து ஐந்தொழில் புரிகின்றான். இச்சக்திகள் அவனையே நிலைக்களனாகக் கொண்டு தத்தம் தொழில் புரியும்.

சத்தி பேதங்கள் திருமூலர் திருமந்திரம் நான்காம் திருமந் திரத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சத்தியின் பல பெயர்களையும் அவற்றின் காரணங்களையும் நுட்பங்களையும் மனங்கரைக்கும் தோத்திரமாக அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. உரிய சக்கரங்களும் கூறப்படுகின்றன.

திருக்குற்றாலத் தலத்தில் பராசத்தி பீடமொன்று திருக் குற்றால நாதருக்கு வடபால் ஓர் சிறு கோயிலில் அமைந்திருக் கின்றது. அதைப் பராசத்தி பீடமென்றும், யோகபீடமென்றும், தரணிபீடமென்றும் அழைப்பார்கள். இப்பீடத்துள்ளாள் எம் பிராட்டியாகிய பராசக்தியென்று தலபுராணம் கூறுகின்றது. மேலும் கூறுவதாவது: பராசத்தியினின்று மற்ற நான்கு சத்தி களும் இறைவனருளால் தோன்றுவார்கள். இவ்வைந்து சத்தி களின் உதவியால் ஐந்தொழில் நடத்தப்பெறும்.

சத்தியின் வடிவங்களாவன: ஒவ்வொரு சத்திக்கும் சடை, மூன்று கண்கள், நூற்றிதழ்த்தாமரை, அபயம், ஆயுதம், செபமாலை, நான்கு கைகள் உண்டு. சந்திரன் போன்றமுகம், அந்த ஐந்து சக்திகளுக்கும் முறையே ஐந்து, நான்கு, மூன்று, ஒன்று நான்காம். அவர்கள் நிறம் வெண்மை, பச்சை, சிவப்பு, பால்நிறம் பொன்னிறம் ஆகும்.

இப் பீடத்தின் அமைப்பு :—

"சிவபெருங் கோண நான்கு சிற்பரை கோண மைந்து
நவபெருங் கோணத் துள்ளே நண்ணு மீரிருபான் முக்கோண்
இவர்தரு வட்ட மென்மே லெட்டித ழீரெண் கோணம்
உவரி மூவட்ட மூன்று சதுரமு முளதோர் பீடம்."

பராசத்தி பீடச் சருக்கம் : திருக்குற்றாலத்தலபுராணம்.

புறச்சந்தான குரவர்களில் நான்காவதான உமாபதி சிவம் அருளிச்செய்த "சிவப்பிரகாசம்"என்ற நூலில்சத்தியின் நுட்பங்களையெல்லாம் திரட்டி அச்சத்தியின் தோத்திரமாகப் பாடுகின்றார்:

"பரந்தபரா பரையாதி பரன திச்சை
பரஞானம் கிரியைபர போக ருபம்
தருங்கருணை உருவாகி விசுத்தா சுத்தத்
தனுகரண புவனபோ கங்கள் தாங்க
விரிந்தஉபா தானங்கள் மேவி ஒன்றாய்
விமலமாய் ஐந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்(து)
அரந்தைகெட மணிமன்றுள் ஆடல் காணும்
அன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம்."

சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருப்பது;— பராசத்தியானது. திரோதானம், இச்சை, ஞானம், கிரியை முதலியசத்தியாய் சிவபிரானுக்குத் திருமேனியாய் சுத்தமாயை அசுத்த மாயை பிரகிருதி மாயை யாகிய உபாதானங்களைக் கூடிநின்று காரியப் படுத்திச் சிவன் செய்யும் ஐந்தொழிற்கும் காரணமாய் ஆன்மாக்கள் பிறவிப் பிணி நீங்கும் பொருட்டு திருச்சபையில் சிவன் திருநடனத்தைக் கண்டருளுகிற பராசக்தியின் அருட்பாதங்களைத் தலைமேல் வைப்பாம். இறைவன் உயிர்களின் பொருட்டு திரோதான சத்திவடிவாகப் பராசத்தியிற் பிரிப்பின்றி வெளிப் படாது நிற்கின்ற உண்மையை மக்களுக்கு உணர்த்தலே ஆலயங்களில் அம்பிகைத் திருமேனி அமைக்கப்படுகிறது.

உயிர்கட்கு அநாதியே கூடியிருந்த ஆணவ மலத்தின் தடையால் உண்டாகிய பசுத்தன்மையை நீக்கிப் பிரிப்பின்றி நிற்கும் சிவமாந்தன்மையை விளக்க வேண்டுமென்ற இரக்கம் இறைவனுக்கு அநாதியே உண்டு. இக்கருணை இறைவனை விட

வேறு பொருளில்லை. அவனுக்குரிய சத்தியே. இரக்கம் இறைவனையன்றித் தனித்து நில்லாது. இறைவனும் அஃதின்றித் தனித்து நில்லான்.

"அருளுண்டாம் ஈசற் கதுசத்தி யன்றே
யருளு மவனன்றி யில்லை—யருளின்
றவனன்றே யில்லை யருட்கண்ணார் கண்ணுக்
கிரவிபோல் நிற்கும்அர னேய்ந்து" —சிவஞானபோதம்.

சக்தி வழிபாடு பண்டைக் காலந்தொட்டே உண்டென்பது ஆராய்ச்சியாளர் முடிவு. ஆறு சமயங்களுள் சைவம், சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும். வைணவம் விஷ்ணுவை, கௌமாரம் குமரனை, காணபத்யம் கணபதியை, சௌரம் சூரியனை முறையே போற்றும். அஃதேபோல் சாக்தேயம் என்ற சமயம் சக்தியையே முதற் கடவுளாக வணங்கும்.

சக்தி பீடங்கள் 6400 என்றும் அவற்றுள் முக்கியமானவை 64 என்றும் சொல்லப்படுகிறது. 64 பீடங்களின் பெயர் ஊர் "திருக்கோயில்" சென்ற புரட்டாசி வெளியீட்டிற் காணலாம். சத்தியையே உபாசனு மூர்த்தியாகக் கொண்டு வணங்கி நற் பயன் பெறுபவர்கள் இன்றும் நம்மிடையே உள்ளனர். கிறிஸ்து மதத்தைச் சார்ந்த ஆர்தர் ஏவலான் (Sir John Woodroffe) என்ற ஞானி நம்முடைய சமய நூல்களைப் பயின்று சத்தி வழிபாட்டை வியந்து அதைப்பற்றி நூல் எழுதியும் தானும் அவ்வழிபாட்டில் ஈடுபடுவாராயின் சக்தியின் பெருமையை எவ்வளவு தான் உரைக்க முடியும்? தாய்தான் பரிவும் அன்பும் நிறைந்தவள். குழந்தை அழுதால் அல்லது பசித்தால் பால் ஊட்டுவாள் அல்லது நேரப்படி நினைந்து ஊட்டுவாள். இத்தாயினுஞ் சிறந்து கருணையே உருவமாகி கருணையே பொழியுஞ் சத்தியைத் தூய மனதுடன் வழிபட்டால் நமக்குக் கிட்டாத தென்ன?

"தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும், நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே."
—அபிராமி அந்தாதி.

SAINT APPAR AND HIS HYMNS

அப்பர் சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்

ஆங்கில மொழிபெயர்ப்பு

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

At Tirunallur, as St. Appar was rising after prostrating before the deity, Lord Siva placed His Feet on his head and blessed him. St. Appar mentions this incident in one of his hymns.

திருநல்லூர் - திருத்தாண்டகம் - 6-ஆம் திருமுறை

நினைந்துருகும் அடியாரை நையவைத்தார் நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார் செழுமதியின் தளிர் வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற இன்மலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

" My Lord of Tirunallur placed His feet on my head. His feet were wet with the honey that was in the flowers that were on the heads of the gods. My lord did make the devotees pine for Him. He had removed the sins in no time. He wore the elephant skin and bedecked Himself with the crescent moon."

From Tirunallur St. Appar went to Karugavur and other places. At Tingalur he came to know of one

Appudi Adigal, who was fascinated by the life of St. Appar and became a devotee of his. Appudi Adigal named every thing of his after St. Tirunavukkarasu. Even the charitable institutions founded by him bore the name of Tirunavukkarasu. St. Appar wanted to meet this devotee and reached the latter's house. He was greeted by all the members of the family and a feast was arranged for him. The eldest son of Appudi Adigal went to bring a plantain leaf and while cutting this he was bitten by a snake. He returned home hastily and died after handing over the leaf to his mother, on which the food was to be served to St. Appar. Appudi and his wife decided to conceal this death and made arrangements for the feast. St. Appar came to know of this and with the deadbody entered the local Siva temple and implored Lord Siva to give life to the boy. It was complied with and the feast took place as if nothing had happened.

(தொடரும்)

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 2 - 25 * வெளிநாடு ரூ. 3 - 00

செயலாளர். "ஞானசம்பந்தம்" அச்சகம்.

தருமபுரம், மாயூரம் P. O.

திருவருட் பயன் – தெளிவுரை

பண்டித வித்துவான், சைவப் புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்,

(மலர் 15. இதழ் 1-இன் தொடர்ச்சி)

5. அருளுரு நிலை.

அஃதாவது அருளே உருவாகிய குருவினது தன்மையாம். திருவருளினது தன்மையை இதுகாறும் கூறினார். இனி அவ்வருளே உயிர்கட்கு வீடு பேறளித்தற் பொருட்டுக் குருவாய் எழுந்தருளி வரும் இயல்பினை இவ்வதிகாரத்துக் கூறுகின்றாராதலின் மேலையதனோடு இயைபுடைத்தாயிற்று. கு – பாசம். ரு – நீக்குபவர். எனவே பாசத்தை நீக்குபவர் குரு எனப்படுவர்.

41. அறியாமை உள்நின்(று) அளித்ததே காணும்
குறிஆகி நீங்காத கோ.

(தெ–ரை) இதுகாறும் கண்ணுக்குப் புலனாகாது தோன்றாத் துணையாய் நின்று, காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடிய திருவருளே உயிர்கட்குத் திருவருள் பதிதற்காம் பக்குவம் வந்த போது, அவை காணும் வடிவினையுடைய குருவாகி எழுந்தருளி வந்து, நீங்காது நின்று, காத்தருளும் தலைமை யுடையதாகும்.

பக்குவமுடைய உயிர்கட்குத் திருவருளே குருவாகி வந்து ஆட்கொண்டருளும் என்பது இதன் கருத்தாகும்

'அளித்ததே' என்ற சொல்லை அளித்த + தே என இரு சொல்லாகப் பிரித்து இதுகாறும் அருள் செய்த தெய்வமே காணும் வடிவாகிக் காட்சி தந்து ஆட்கொள்ளும் எனப்பொருள் கோடலும் உண்டு.

42. அகத்துறுநோய்க்கு உள்ளினர் அன்றி அதனைச்
சகத்தவரும் காண்பரோ தான்.

(தெ-ரை) ஒரு வீட்டின்கண் ஒருவர் கொண்ட பிணியை அவ்வீட்டின்கண் வாழ்வார் அறிவதன்றி, அதனைச் சேய்மைக் கண்ணராகிய உலகத்தார் அறியவல்லரோ? அறியமாட்டார் என்றவாறு. அதைப்போலவே உயிரோடு கலந்துள்ள ஆணவம் என்கிற நோயையும், உயிர்க்குயிராக இருக்கும் இறைவனே குருவாக எழுந்தருளி வந்து நீக்கினலன்றி, வேறு பிறரால் நீக்க இயலுமோ? இயலாது என்பதாம்.

'அகம்'என்பது ஈண்டாகு பெயராய் அவ்வீட்டிலுள்ளாரைக் குறித்தது. உள்ளினர் அவ்வீட்டில் உள்ளவர்கள். காண்பரோ என்பதிலுள்ள ஓகாரம் எதிர்மறைக்கண் வந்தது. தான் என்பது அசைநிலை.

இதற்கு இவ்வாறன்றி சரீரத்திலே ஒரு வியாதி வந்து பொருந்தினல் சரீரத்துக்கு உடனுயிருக்கிற ஆன்மா அறிகிறதே யல்லாமல், பெண்டாட்டி, பிள்ளை, பிதா, மாதா, சுற்றத்தார் அறிவார்களோ; அப்படிப்போல ஆன்மாவினிடத்திலேயிருக்கிற அறியாமையை உயிர்க்குயிராய் இருக்கிற பரமசிவனே ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளி வந்து நீக்குகிறதேயல்லாமல் கற்றபேர் கேட்டபேராலே ஆகாது* எனவும்; ஒருவனுக்கு அந்தரங்கமான இடத்திலே வந்த வியாதியை அவனுக்கு அந்தரங்கமான பேர் அறிவாரேயன்றி, அதனைச் சேய்மைக்கண்ணுள்ள உலகத்தவர் அறிவாரோ? அறியவாரார். (அவ்வாறே) உயிரறிவோடு கலந்துள்ள ஆணவ மலம் என்கிற வியாதி, சிவனே ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளி நீக்கினல் நீங்குமல்லாமல், வேறு சாமானியரால் நீங்காது-எனவும் உரைப்பாரும் † உளர்.

43. அருளா வகையால் அருள்புரிய வந்த
பொருளார் அறிவார் புவி.

(தெ-ரை) படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கினையும் உயிர்கட்கு மறைந்து நின்று செய்தது போலவே, மனித வடிவத்திலே தன்னை மறைத்து அருளல் என்னும் தொழிலையும் செய்ய வந்த குரு வடிவத்தை உலகில்

* சிந்தனையுரை. † திரு. தே. ஆ. ஸ்ரீநிவாசன்.

யார் அறியத் தக்கவர்கள்? பக்குவமுள்ள உயிர்களே அறியத் தக்கவர்கள் என்றவாறும்.

'பொருளா அறியா புவி' என்று பாடமோதி மானிட வடி வென்னும் சட்டையால் மறைத்துக் கொடுவந்த உண்மைப் பொருளே இக்குரு வடிவாக வந்தது என்பதனை அறியமாட்டாது இவ்வுலகம் எனப் பொருள் உரைப்பாரும்‡ உளர்.

44. பொய்இருண்ட சிந்தைப் பொறியிலார் போதமாம்
மெய்யிரண்டும் காணார் மிக.

(தெ – ரை) நிலையற்ற உலகின்பத்தில் கருத்துடைய வரும், ஆணவமான படலத்தால் மறைக்கப்பட்ட அறிவினை உடையவரும், ஞானமாகிய ஒளியைப் பெருதோரும், அறிவு மயமாகிய அருளையும், அவ்வருளால் ஆகிய குருவடிவையும் சிறிதும் அறியமாட்டார்கள் என்பதாம்.

பொய் - நில்லாதவற்றை நிலையெனக் கருதி வாழும் உலகி யலின்பம். பொறி–ஒளி; அஃது ஈண்டு ஞானத்தைக் குறித்தது. 'போதமாம் மெய்யிரண்டும்' என்பது போதமும், போதமாம் மெய் யும் என இரண்டாகக் கொள்ள வேண்டும்.

போதம் – அருள்; போதமாம் மெய் - அருளே உருவாகிய குரு வடிவு.

45. பார்வைஎன மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வைஎனக் காணார் புவி.

(தெ – ரை) அவ்வவ் இனத்துப் பழக்கப்பட்ட விலங்கு களின் துணையைக் கொண்டு விலங்குகளைப் பிடிப்பது போல, இறைவனும் மக்களைத் தன் வயத்தராக்குதற்குக் குருவடிவாய மக்கட் போர்வையைச் சார்த்தி வருவதை உலகத்தவர் அறியார்.

பழக்கப்படாத புதிய மிருகங்களைப் பிடித்தற்குப் பழக்கப் பட்ட மிருகங்களைப் பயன்படுத்துவர். அப்பழக்கப்பட்ட மிருகங் களுக்குப் 'பார்வை' என்று பெயர். இங்ஙனமன்றி விலங்குகள் பறவைகள் இவற்றைப் பிடித்தற்கு அவ்வவற்றின் வடிவாகச் செய்யப்பட்ட வடிவங்களையே 'பார்வை' என்பாரும்§ உளர்.

(தொடரும்)

‡ நிரம்ப அழகிய தேசிகர். § திரு. கா. சு, பிள்ளை; நிரம்ப அழகிய தேசிகர்,

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 15, இதழ் 1-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

39. மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலு
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

39. As the vina's pure sound, as the moonlight at even,
As the south wind's soft breath, as the spring's growing heat,
As the pool hovered over by whispering bees,
So sweet is the shade at our Father-Lord's feet.

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

திரு நின்றியூர்

தேவார மணி, திரு. சட்டையப்பன் அவர்கள்.
திருப்பனந்தாள்.

சோழ நாட்டிலே காவிரி யாற்று வடகரைத் தலங்கள் அறுபத்து மூன்று; அவற்றில் பத்தொன்பதாவது தலமாக விளங்குவது திருநின்றியூர்.

இத்தலம் மாயூரத்திலிருந்து சீர்காழி செல்லும் கற் பாதையிலே ஆறுவது கல்லில் இருக்கிறது.

இறைவன் திருநாமம்:—	மகாலட்சுமிநாதர்
இறைவியின் திருநாமம்:—	உலகநாயகி.
தீர்த்தம்:—	நீலதீர்த்தம்.

'சம்பாதி – சடாயு' என்ற புள்ளரையர் வழிபட்ட புள் இருக்கு வேளூரைப் பணிந்து போற்றிய புகலியர் கோன் - திருஞானசம்பந்தர், புகழால் நீண்ட நின்றியூர்ப்பதி யடைந்து ஆங்குறையும் சிவபெருமானை ஆராத அன்பினுல் வணங்கி வழிபடுகின்ருர். அப்போது "சூலம்படை" என்னும் நட்டபாடைப் பதிகம் அருள்கின்ருர்.

இப்பதிகத்தால் நாம் அறியக் கிடைப்பது:

"நீலம் மலர்ப் பொய்கை நின்றியூர்" என்ற முதற்பாவின் இறுதியடியில் 'நீல தீர்த்தம்' தலத்திலுள்ளது என்பதை யுணர்கின்ருேம்.

அடுத்து, நின்றியூரரை வணங்கி வழிபடும் அடியார் 'அச்சம் முதலாயின இல்லாதவர்' என்பதைக் கூறித் தலமுடையவரைப் 'பட்சமுடைய பெருமான்' என்றருள்கின்ருர்.

மூன்ருவது பாடலில் 'நின்றியூர் நிமலனே யல்லாது என் உள்ளம் வேறென்றையும் உணராது என்று குறிப்பிடுகின்ருர்.

பாடுபவர்களின் பாடலைக் கேட்டுப் பரவசமடைவோர் பலராக இருப்பார்கள்; ஆனுல் பாடுபவரைப் பார்த்துத் தாமும் பாட வேண்டுமென்ற விருப்பம் உடையார் சிலரே. அந்தச் சிலர் சிவபெருமானின் கருணைக்கு - திருவருளுக்குப் பாத்திரமானவர் என்ருல் அது மிகையல்ல.

"குழலின்னிசை வண்டின்னிசை கண்டுகுயில் கூவும்"

என்ற ஐந்தாவது பாடல், பாடுவாரைப் பார்த்து மற்றவர்க்கும் பாட வேண்டும் என்ற விருப்பம் உண்டாவதைப் போல 'குழலிசையையும் - வண்டினது இசையையும் கேட்டுக் குயில் கூவுகின்றன' என்பதைப் படம் பிடித்துக் காட்டுகின்ருர்.

திருக்கடைக் காப்பில்,

"குன்ருத்தமிழ் சொல்லக்குறை வின்றிநிறை புகழே"

என்று அருள்கின்ருர்.

எஞ்ஞான்றும் திருவருள் குறையாத தமிழ்-ஞானசம்பந்தப் பெருமானின் நற்றமிழ்.

ஆண்ட அரசாம் திருநாவுக்கரசர், ஆளுடைப் பிள்ளையாம் திருஞான சம்பந்தரோடு கோலக்காவைச் சென்றிறைஞ்சி, விடைபெற்றுக் கொண்டு வேதநாயகராம், சிவபெருமான் விரும்பி யுறையும் பதிகளான கருப்பறியலூர், புன்கூர், நீடூர், குறுக்கை முதலியனவற்றைக் கைதொழுது பின் நின்றியூர் கண்ணுதலார் கழல் வணங்கிப் பாடுகின்ருர்.

"கொடுங்கண் வெண்தலை" எனத் துவங்கும் அத்திருக் குறுந்தொகை.

அஞ்சியாகிலும், அன்பு பட்டாகிலும் நின்றியூரரை நினைக்க வேண்டும் என்பதாக நினைதலை யுடைய நெஞ்சத்துக்கு அறிவிப்புத் தருவது அப்பரடிகளின் பெருவிருந்தாகும்.

நின்றியூரை அன்பினுல் தொழுவார் வினைகள் சுருங்கு மென்பது சொல்லரசின் தொல்வரவாம்.

நனிபள்ளியமர்ந்துறை பிரானுர் திருவடியைப் பணிந்து தீந்தமிழ் பாடிய வன்றொண்டராம் சுந்தர மூர்த்தி சுவாமிகள், திருச்செம்பொன்பள்ளி முதலாய பல பதிகளைப் பணிந்து போற்றி விடைமேல் வரும் வித்தகராம் சிவனை வணங்கத் திருநின்றியூர் வந்து சேர்கின்ருர்.

நின்றியூர் மேய சிவனுரை நேசத்தால் வணங்கி வழிபடும் சுந்தரரை—அவர் உள்ளக்கிடக்கையை நமக்கு விரிக்கிருர் சேக்கிழார் பெருமான்:

" நின்றியூர் மேயாரை நேயத்தாற் புக்கிறைஞ்சி
ஒன்றியஅன் புள்ளுருகப் பாடுவார் 'உடைய அரசு
என்றும்உல கிடர்நீங்கப் பாடியஏ ழெழுநூறும்
அன்றுசிறப் பித்(து)அஞ்சொல் திருப்பதிகம் அருள்செய்தார்."

நின்றியூர் மேயவரை நேசத்தால் ஒன்றிய அன்பு உள்ளத் தால் பாடும்போது திருநாவுக்கரசர் பாடிய பாடல்களின் எண்ணிக்கையைக் கூறுகின்ருர் சுந்தரர். அதுதான் 'உடைய அரசு என்றும் உலகிடர் நீங்கப்பாடிய ஏழெழுநூறும்' என்று சேக்கிழார் குறிப்பது!

'திருவும் வண்மையும்' எனத்துவங்கும் தக்கேசிப்பண்ணில் இரண்டாவது பாடலில்,

" இணைகொள் ஏழெழுநூறிரும் பனுவல்
ஈன்றவன் திருநா வினுக்கரையன்"

என்று சுந்தரர் பாடுகின்ருர்.

ஏழெழுநூறு $7 \times 700 =$ 4900 பதிகங்கள்.
$=$ 49,000 பாடல்கள்.

இந்த நற்றமிழில்—சுந்தரர் பாட்டில், திருநாவுக்கரசர் பாடியருளிய பாடலின் தொகை நமக்குப் புலனுகின்றது.

"பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி பரசுநாவரசு"

என்ற திருநாவுக்கரசர் திருவேகாதசமாலைப் பாடலும் இங்கு எண்ணவுரியது.

நாவுக்கரசர் பாடல் முன்பு நாற்பத் தொன்பதினுயிரம் இப்போது இருப்பது மூவாயிரத்து அறுபத்தாறு.' காலங்காட்டும் நன்மையும், தீமையும் 'ஆக்கமும்—அழிவும்' எல்லாவற்றுக்கும் நல்ல உதாரணமென்று சொல்லலாம் நாவுக்கரசர் பாடல் எண்ணிக்கை! ஏன்? திருமுறைகளிற் பல சிதைவுக்குக் காரணமாகி விட்டனவே, அதுவுந்தான்!

நாட்டிலே சில நல்லவர்களால் எஞ்சி உள்ளத் திருமுறைப் பனுவல்கள் இன்று போற்றிப் பாதுகாக்கப் பெற்று அதனுல் பலர் பயன் கொள்ளும் நிலையில் இருந்து வருகின்றன.

'நின்றியூர்ப் பெருமானைப் பரசுராமன் வணங்கி வழிபட்டு, நின்றியூரைப் பெருமானுக்கும் முந்நூற்றுபதுவேலி நிலத்தை வேதியர்கட்டும் அளித்தான்; பத்தி செய்த அவனுக்குப் பாதம் காட்டினுர் பரமன்.' என்பதாக ஒரு வரலாறு கிடைக்கிறது சுந்தரர் பாடலில். அப்பாடல்,

"மொய்த்தசீர் முந்நூற் றறுபது வேலி
மூன்று நூறுவே தியரொடு நுனக்கு
ஒத்த பொன்மணிக் கலசங்கள் ஏந்தி
ஒங்கு நின்றியூர் என்றுனக் களிப்பப்
பத்தி செய்தஅப் பரசுரா மற்குப்
பாதங் காட்டிய நீதிகண் டடைந்தேன்
சித்தர் வானவர் தானவர் வணங்கும்
செல்வத் தென்திரு நின்றியூ ரானே"

அடுத்து ஐந்தாவது பாடலில், அகத்திய முனிவருக்குப் பொதியமலை வாழ்க்கையை அருளிய பெருமானை—இந்திரனது வழிபாட்டை ஏற்று அவனுக்கு வானுலக ஆட்சியாளனுக்கிய அருளிப்பாட்டை விளக்குகின்றுர்.

உமா தேவியாரின் திருமணத்தைக் காண இமய மலையில் மூவுலகத்திலுள்ளவர்களும் கூடுகின்றனர். பாரப்பளுவால் வட திசை தாழ்கிறது; தென்திசை உயர்கின்றது. அப்போது இறைவன் இருதிசையைச் சமன் செய்யும் பொருட்டாக அகத்திய முனிவரைத் தென்னுடு செல்லப் பணித்தார். 'இறை

வனது திருமணக் காட்சியை—நடனக் கோலத்தைக் காணமல் போகிறேமே' என வருந்தும் அகத்தியனுருக்குக் குற்ருலமலை வளம், சிறப்பைக் கூறி ஆங்கு 'விஷ்ணு வாயிருக்கும் தம்மைச் சிவலிங்கமாக்கி ஆகம விதிப்படி பூசனைபுரி' எனச் சிவபெருமான் ஆணையிட்டருளி 'அப்போது தம்முடைய மணக் கோலத்தையும்-திருநடனத்தையும் காணலாம்' என்றும் வாக்களித்து அனுப்பி வைக்கிருர்.

சிவபெருமானது அருளாணை வண்ணம் இமயத்தை விட்டு நீங்கி, கேதாரம், விதர்ப்பம், காசி முதலியன கடந்து ஓங்கி வளர்ந்து வழி மறைத்த விந்தாடவியின் வீறு கெடுத்து, வில்வலவன்—வாதாவி முதலியோரையழித்து நதிகள் பல நீராடிப் பின் காஞ்சி, அண்ணுமலை, முதுகுன்றம் வழிபட்டுத் தன் கமண்டல நீரைக் காக்கை வடிவு கொண்டு கயமுகன் கவிழ்க்க அதைக் காவிரியாகப் பெருகக் கண்டு, குடந்தை – ஐயாறு – வலஞ்சுழி – இடைமருது–ஆனைக்கா – வெண்காடு – வேதாரண்யம் போன்ற தலங் கண்டு வணங்கித் தில்லைப் பொதுநடம் போற்றிப்பின் சேது மேவி, கொடுங்குன்றம், புத்தூர், ஏடகம், திருஆடானை, மதுரை, நெல்லை போன்ற பல தலங்களையடைந்து வழிபட்டுப் பின் இறுதியாகப் பொதியமலையையடைந்து என்றுமுள தென்தமிழை இயம்பி இசைகொண்டார் அகத்திய முனிவர்; அவருக்குப் பொதியமுனி—தமிழ் முனி என்னும் பெயர்களும் கிடைத்தன. அன்று வந்த அம்முனிவர், இன்றும் பொதிய மலையில் வாழ்வதாகப் பெரியோர்கள் கூறுகின்ருர்கள்.

இமயத்தில் திருக்கேதாரம் செல்லும் வழியில் 'அகஸ்தமுனிச் சட்டி' யென்றெரு ஊர் இருக்கிறது. ஆங்கு அகஸ்தியர் ஒரு சிறிய கோயிலில் இருக்கிருர். அவரை வழிபடும் மக்கள் இமய வாசிகள் 'தெற்கே சென்ற அகஸ்தியர் இன்னும் திரும்பவில்லை' என்று ஏக்கத்தொடு கூறுகின்றனர். ஆனல் தெற்கே இருப்பவர்கள் 'இங்கே வந்தவர் இன்னும் இங்கேயே வாழ்கின்ருர்' என்ற நினைப்பில் இருக்கின்ருர்களா? என்ருல் இல்லாமலில்லை என்று சொல்லலாம். ஏன் எனின், 'அகத்தியருக்கு மணக் கோலங் காட்டியது—அகத்தியர் வழிபாடு செய்தது' என்றெல்லாம் எத்தனையோ தலங்கள் தெற்கே உண்டு, அதனல்!

குறுமுனிவன் ஏத்தும் முத்தமிழோன் யார்? குமரகுரு, கார்த்திகைப் பெருமான்!

இது ஒன்றே போதும்.

இனி சுந்தரர் பாடுவதைக் கேட்கலாம் :

"வந்தொர் இந்திரன் வழிபட மகிழ்ந்து
வான நாடுநீ ஆள்கென அருளிச்
சந்தி மூன்றிலுந் தாபரம் நிறுத்திச்
சகளி செய்திறைஞ் சகத்தியர் தமக்குச்
சிந்து மாமணி அணிதிருப் பொதியிற்
சேர்வு நல்கிய செல்வங்கண் டடைந்தேன்
செந்தண் மாமலர்த் திருமகள் மருவும்
செல்வத் தென்திரு நின்றியூ ரானே."

ஓர் இந்திரன் எனக் கூறுவது, கற்பந்தோறும் இந்திரர் வேறுபடுதலினுல். காலே, நண்பகல், மாலே ஆய மூன்று சந்திகளிலும் இலிங்கம் பிரதிட்டை செய்து உருவம் படைத்து வழிபாடு நிகழ்த்திய அகத்திய முனிவருக்குப் பொதியமலே வாழ்க்கையை அருளிச் செய்தவர் சிவபெருமான், 'செல்வன் கழல் ஏத்துஞ் செல்வம் செல்வமே' என்று ஆளுடைப் பிள்ளேயருளுவது போல் 'செல்வங்கண்டு அடைந்தேன்' என்று அகத்தியருக்குப் பொதிய மலே வாழ்க்கையை அருளிய சிவபெருமானது கொடைத்திறம் போற்றி இன்புற்றுப் பாடுகின்ருர் சுந்தரமூர்த்திகள். அதோடு 'திருமகள் வழிபட்டு நிலேபேறெய்திய தலம் இது' வெனக்காட்டுவதுபோல் 'திருமகள் மருவும் செல்வத்தென் திருநின்றியூர்' என்று பாடுகின்ருர்.

'அற்றவனுர் அடியார்' என்று அவர் துவங்கிப்பாடும் நட்டராகப் பண்ணில்,

"நேசத்திஞல் என்னேஆண் டுகொண்டார்"

"இசை ஏழுகந்தார்"

"சரண் அடைந்தார் நெஞ்சங் கொண்டார்"

என்றெல்லாம் பாடுகின்ருர்.

அப்படிப் பாடிய அவர்,

“எட்டுகந் தார்திசை ஏழுகந் தார்எழுத் தாறும்அன்பர்
இட்டுகந் தார்மலர்ப் பூசையிச் சிக்கும் இறைவர்முன்னுள்
பட்டுக்கும் பாரிடைக் காலனைக் காய்ந்து பலியிரந்தூண்
சிட்டுகந் தார்க்கிடம் ஆவது நந்திரு நின்றியூரே.”

என்று எட்டாவது பாடலை அருள்கின்றார்.

இறைவன் உகந்த திசைகள் எட்டு; 'எட்டுக்கொலாம் திசையாக்கினதாமே' என்றும்

'திசைகள் எட்டும் செறிந்தவன் காண்' என்றும், எண் தோள் வீசி நின்றாடும் பிரானை ஏத்துவார் நாவரசரும்.

இறைவன் உகந்த எழுத்து ஏழு; அது ஏழிசையாம், ச, ரி, க, ம, ப, த, நி.

'ஏழிசையாய், இசைப்பயனாய்' என்பது சுந்தரரின் சொல்லழகு!

'பண்ணும், பதம் ஏழும்' என்பது ஆளுடைப் பிள்ளை வீழிமிழலையில் அளித்த விருந்து! 'ஏழோசை' எனவும் கூறுவார்.

'குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன தமிழ் நூல் வழங்கும் தொல் வரவு!'

'அன்பர் பூசைஆறும் இச்சிக்கும் இறை' — அன்பர்கள் செய்யக் கூடிய ஆறுகால பூசையையும் விரும்பும் இறைவர்.

'பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து' என்பது திருவிளையாடற் புராணக் கடவுள் வாழ்த்தொலி! அழுதடி யடைந்த அன்பனை — மணிவாசகப் பெருமானைப் பரஞ்சோதி முனிவர் பணித்தேத்தும் பண்பு!

“எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை.”

(பெரியபுராணம், திருக்குறிப்புத் தொண்டர் புராணம்: 51)

அம்மையிடம் 'பூசனையை விரும்புவதாகக்' கூறிய இறைவன், சுந்தரரிடம் பாடல் கேட்கும் ஆசையில்,

"..........நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அற்சனை 'பாட்டே' ஆகும்........"

என்று கூறிப் பின்னர் 'பித்தன் என்றே பாடுவாய்' என்று அடியெடுத்தும் கொடுத்து விடுகின்றார். உலகம் உய்யப் பெரிதாம் திருப்பதிகம் 'பித்தா பிறைசூடி' என 'வெண்ணை நல்லூரானைப் பாடத் துவங்கிய சுந்தரர், பல தலங்களை வழிபட்டுக்கொண்டு திருநின்றியூர் வந்து நமக்கு வேண்டுவன ஈவானும் பிரானும் சிவனை அடைந்துய்யப் பல விளக்கங்கள் அளிக்கிறார்.

"நனிபள்ளி அமர்ந்தபிரான் கழல்வணங்கி நற்றமிழின்
புனிதநறுந் தொடைபுனைந்து திருச்செம்பொன் பள்ளிமுதல்
பனிமதிசேர் சடையார்தம் பதிபலவும் பணிந்துபோய்த்
தனிவிடைமேல் வருவார்தந் திருநின்றி யூர்சார்ந்தார்."
(பெரிய. ஏயர்—149)

சின்னஞ்சிறிய கோயில் திருநின்றியூர்; அழகு பொலியும் சோலை - கழனியை உடையது; திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான தேவத்தானங்களில் ஒன்று; ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி யவர்களின் அருளாட்சியிலே சில ஆண்டுகளுக்கு முன் கும்பாபிடேகம் நடைபெற்றுக் கோயில் நல்ல முறையில் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது.

மதிப்புரை:

திருச்செந்தில் முருகன் சந்நிதி முறை

"அற்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்ருர் தூமறை பாடும் வாயார்"

என்பது அருள்மொழி. இறைவன் திருவருளுக்கு நம்மை உரிய வராகச் செய்வன, அவன் திருவடியைப் புகழ்ந்து பாடும் பாடல்களே. திருஞானசம்பந்தர் இதனைப் பாடல்நெறி என்று அருளிச் செய்துள் ளார். அவன் அருளாலே அவன் தாள் வணங்கி, அவன் அருள் உள்ளத் திருந்து உந்த, அவன் திருவடிகளைப் புகழ்ந்து பாடி வழி படுதல் ஒன்று; மற்ருென்று, வாழையடி வாழையென வந்த திருக்கூட்டத்து மெய்யடியார்கள திருவருள் விளக்கமாகச் சொல்லியவற்றையே சொல்லி ஏத்தி வழிபடுதல். முந்திய முறைக்கு, இவ்விருபதாம் நூற் ருண்டில் இலக்கியமாகத் திகழும் இறைவன் அடியார்களுள் **"திருச்செந்தில் முருகன் சந்நிதி முறை"** என்ற அருள் கொழிக்கும் பாடல் தொகுப்பினைப் பாடியுள்ள **திருமதி. முருகையப பங்கஜாட்சி** அம்மையாரும் ஒருவர். முருகப்பெருமான் மீது இவ்வம்மையார் கொண்டுள்ள பேரன்பின் சிறப்பும், மூவர் தேவாரம், திருவாசகம், ஏனைய அருட்செல்வர்களின் பாடல்கள் ஆகியவற்றில் இவருக்குள்ள மனமொன்றிய ஈடுபாடும் பயிற்சியும், முருகப்பெருமான் இவர் உள்ளத் திருந்து காட்டிய அருள் விளக்கமும், இவர் பாடல்களில் தெற்றெனப் புலப்படுகின்றன. படித்த அளவிலேயே, எவருடைய உதவியுமின்றிப் பொருள் விளங்குமாறு, இனிய எளிய செஞ்சொற்களால் தமிழே வடி வாகிய முருகப்பெருமானைப் பாடிப் போற்றியுள்ளமை காலத்திற்கேற்ற அருமையான தொண்டு. முருகனடியார்கள், ஏனைய அருள்நூல் களோடு, இவ் அருள் நூலையும் வாங்கிப் படித்துத் திருவருள் இன்பம் பெறுவார்களாக. விலை ரூ, 1-50.

கிடைக்கும் இடம் :—

திரு. C. சோமசுந்தரம் பிள்ளை,
ஸ்ரீரமணுச்சிரமம் போஸ்ட், திருவண்ணுமலை,

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலர் 15, இதழ் 1-ன் தொடர்ச்சி]

கருணையில் லாதார் — கடலுல கில்வானில்
அருளையடை யாரென்று — அருளியவென் சற்குருவே. 91

சாகாத கல்விமுதற் — சாற்றுகின்ற நால்வகையும்
ஆகாத லாலுறுஞ்சன் — மார்க்கமென்ற சற்குருவே 92

அருணிலையைப் பெற்றபொழுது — அட்டமா சித்தி
மருவிக்கிடக்கு மென்னும் — வாய்மையருள் சற்குருவே. 93

உடம்புவரும் வண்ணமெலாம் — ஓர்விண்ணப் பத்தில்
திடம்பெறவே வாசகமாச் — செப்பியருள் சற்குருவே. 94

உண்மை ஞானியின் திறத்தை — யோர்விண்ணப் பத்தினிலே
வண்மையுறும் வாசகமாய் — வாய்மலர்ந்த சற்குருவே. 95

தமிழொன்றே யிவ்வுலகில் — தந்தைபாசை யென்றே
அமிழ்தமுறும் வாக்கால் — அருளியவென் சற்குருவே. 96

ஈகாத லுள்ளோர்க்கே — எவ்விடத்து மெந்நலமும்
ஆகாத தில்லையென்றே — ஆய்ந்துரைத்த சற்குருவே. 97

எல்லா அறிவுமே — எம்மறிவே யென்றுரைக்கும்
பொல்லார் குழாம்விடவும் — போதித்த சற்குருவே. 98

கன்மமே சன்மமாங் — கன்மமே மெய்க்கடவுள்
என்மரைச் சேராதீர் — என்றருளுஞ் சற்குருவே. 99

சார்பலவா மாமாயா — சத்திகளே வத்துவென்போர்
சார்படையேல் என்னுமுண்மை — சாற்றியருள் சற்குருவே. 100

(தொடரும்)

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் இயற்றியது.

நீதிநெறி விளக்கம்

உரைநடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்*

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

[மலர் 15. இதழ் 1-ன் தொடர்ச்சி]

துயிற்சுவையும் தூநல்லார் தோட்சுவையும் எல்லாம்
அயிற்சுவையின் ஆகுவஎன் றெண்ணி – அயிற்சுவையும்
பித்துணக் கொள்பபோல் கொள்ப பிறர்சிலர்போல்
மொத்துண மொய்ம்பி னவர்.

வேறு சிலரைப் போல ஐம்புலன்களால் அலைப்புறுத தவ வலிமையுடையவர் உறக்க இன்பமும் மங்கையர்களது தோள் தழுவுதலால் உண்டாகிற காம இன்பமும் மற்ற இன்பங்களும் சுவை உணவு உண்ணுதலால் உண்டாவன என்று நினைத்துப் பித்துப் பிடித்தவன் சுவையறியாது உணவு கொள்வது போல் கொள்ளுவார்கள்.

Renunciation - Food

The ascetics, being fully aware that the desire for the enjoyment of sound sleep and the charms of beautiful women, springs from the love for delicious food, eat only very sparingly like mad men, caring little for the taste, as they possess the fortitude of mind, which cannot be enslaved by the senses. 86

அன்போ டருளுடைய ரேனும் உயிர்நிலைமற்(று)
என்பியக்கம் கண்டும் புறந்தரார் – புன்புலாற்
பொய்க்குடில் ஓம்புவரோ? போதத்தால் தாம்வேய்ந்த
புக்கில் குடிபுகுது வார்.

---

* Translated by: Sri P. Mutharasu M. A., B. T., Head of the Tamil Department, Sri K. G. S. Arts College, Arulnandi Nagar.

மெய்ஞ்ஞானத்தினுலே தாங்கள் வேய்ந்துகொண்ட முத்தியாகிய புதுவீட்டில் குடிபுகும் துறவிகள், அற்பமாகிய புலால் பொதிந்த நிலையில்லாத உடலாகிய குடிசையைப் பாதுகாப்பார்களோ? அவர்கள் மற்ற உயிர்களிடத்து அன்பும் அருளும் உடையவர்களாயினும், தமது உயிர் நிற்கும் இடமாகிய உடம்பு, உண்டி சுருக்கம் முதலியவற்ருல் எலும்பு இயங்குதலைப் பார்த்த போதும் அதுபற்றி அவ்வுடம்பைப் பாதுகாக்க மாட்டார்கள்.

Renunciation - Bodily tenement

Ascetics will never seek to cherish their bodies, even though they see that they are becoming lean and skeleton-like, because of incessant penance. Will such holy men who have built for themselves a permanent divine abode by wisdom, stoop to preserve the false tenement of despicable flesh? 87

சிற்றின்பம் சின்னீர(து) ஆயினும் அஃதுற்ருர்
மற்றின்பம் யாவையும் கைவிடுப – முற்றுந்தாம்
பேரின்ப மாக்கடல் ஆடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும்பி யில்.

சிற்றின்பம் சிறிது நேரத்திற்கே நிற்கும் இயல்பை உடையது. ஆயினும் அதனை அடைந்தவர்கள் மற்ற இன்பங்கள் அனைத்தையும் கைவிட்டு விடுவார்கள். எப்பொழுதும் பேரின்பமாகிய பெருங்கடலில் மூழ்கித் திளைப்பவர்கள் உலக இன்பமாகிய பாழ் நரகத்தில் விழுந்து வருந்துவார்களோ?

Renunciation - Sensual pleasure

Though sensual pleasure is short-lived, those who indulge in it, will renounce all other forms of enjoyment; but they who bathe in the great ocean of divine bliss will never fall into the infernal pit of earthly pleasure. 88

எவ்வினைய ரேனும் இணைவிழைச் சொன்றிலரேல்
தெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉம் – அவ்வினை

காத்தல் இலரேல் எனைத்துணைய ராயினும்
தூர்த்தருந் தூர்ப்பார் அலர்.

மெய்ஞ்ஞானியர் வேறு எந்தச் செயலை உடையவர்களாயிருந்தாலும் பெண்களைச் சேர்தலாகிய ஒன்று மட்டும் இல்லாதிருப்பார்களாயின் அவர்களது பகைவரும் அவர்கள் இருக்கும் திக்கு நோக்கிக் கைகூப்பி வணங்குவர். அவ்வாறின்றி அவர்கள் எவ்வளவு சிறந்தவர்களாயிருந்தாலும் பெண்களைச் சேர்தலென்னும் அதனைப் பாதுகாத்தல் இல்லாதவர்களானால் காமுகருங்கூட அவர்களைப் பற்றிப் பழிமொழிகள் பேசுவர்.

Renunciation - Sexual desire

Whatever may be the conduct of ascetics, if they are only free from the fault of sexual desire, even their enemies will adore and worship them; but if they fail to guard against that desire, even the profligate will censure them far and wide, however venerable they may be held in other respects. 89

பரபரப்பி ேனாடே பலபல செய்தாங்(கு)
இரவுபகல் பாழுக் கிறைப்ப – ஒருவாற்றான்
நல்லாற்றின் ஊக்கிற் பதறிக் குலைகுலைப
எவ்வாற்றான் உய்வார் இவர்.

துறவிகளிற் சிலர் இரவு பகல் எந்த வேளையிலும் பரபரப்போடு பலபல செயல்களைச் செய்து பயனற்ற வழிகளில் காலத்தைக் கழிப்பர். உண்மை யுணர்ந்த பெரியோர் ஒரு வகையில் இவரை நல்ல நெறியில் செலுத்தினால் அந்நெறியிற் செல்லுதற்கு மனம் பதறி உடல் நடுங்குவர். இவர் எந்த வகையால் உய்வு பெறுவார்?

Renunciation - Vain deeds

There are certain ascetics who do this and that recklessly in haste and waste days and nights in vain. If some one, by any means, puts them in the right path, they tremble with fear and get confounded. What shall be the salvation for them? (தொடரும்) 90

சந்தாதார்களுக்கு அறிவிப்பு

"குமரகுருபரன்" திங்கள் இதழ், தமிழ் மாதந்தோறும் முதல் நாளன்று சந்தாதார்களைச் சேரும் வண்ணம், சென்ற ஆண்டு வரை, ஒவ்வொரு இங்கிலீஷ் மாதத்திலும் 13, 16ம் நாட்களில் "குமரகுருபரன்" இதழ்களை அஞ்சலில் சேர்ப்பதற்கு அனுமதி பெற்றிருந்தோம். ஆனால் இவ்வாண்டில் அதனைப் புதுப்பிக்க மனுச் செய்திருந்ததில், தலைமை அஞ்சல் அலுவலகம் 15,16ம் உ களில் மட்டுமே அனுப்பலாமென்ற உத்தரவைப் பிறப்பித்தது. அதன் காரணமாகத் தைமாதப் பொங்கல் இதழ் சந்தாதார்களுக்கு வழக்கம் போல் மாதப்பிறப்பன்று கிடைக்க, எவ்வளவு முயன்றும், வசதியில்லாமல் போய் விட்டது குறித்து வருந்துகின்றோம். ஆனால் முயற்சி திருவினையாக்குமென்பதை உறுதியாகக் கடைப்பிடித்து விடாது முயற்சி செய்து வருகிறோம். திருவருளால் நாம் வேண்டும் வண்ணமே அனுமதி கிடைக்கும் என்ற நம்பிக்கைக்கு இடமிருக்கிறது. அதுவரை சந்தா அன்பர்கள், இதழ் கிடைப்பதில் ஏற்படும் காலத் தாழ்ச்சியைப் பொறுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

—நிர்வாக ஆசிரியர்.

அப்பருக்கன்பர்

கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர்,
பண்டித வித்துவான், சைவப்புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

ஒரு சொல்தான். அதைச் சொன்னார். அதை எழுதினார். அவர் சிவகதி எளிதின் பெற்றாரையா. அது என்னசொல்? திருநாவுக்கரசெனும் ஒரு சொல்தான். "எழுதியும் கூறியும் என்றும் துன்பில் பதம் பெற்றான் ஒரு நம்பி அப்பூதி யென்னும் பெருந்தகையே" என்கிறது நால்வர் நான்மணி மாலை.

இவ்வப்பூதி அடிகளார் நம் ஐயாற்றுக்கு அருகிலுள்ள திங்களூரினர். நல்லொழுக்கத்தின் அடிப்படையின் மேல் வளரத் தக்கது சைவம் என்பது மரபு. இதனை அப்பூதி அடிகள் புராணம் இரண்டாம் பாட்டால் அறிக. இவ்வாறே திரு நீலகண்ட நாயனார் புராணத்திலும் நம் சேக்கிழார் பெருமான் கூறியருளியது அறியத் தக்கது. அப்பூதி அடிகள் முன்பின் திருநாவுக்கரசரைக் கண்டதில்லை. எனினும் அவர்பால் பெரிதும் ஈடுபாடு உற்றார். அதனால் பல கருவிகளுக்கும், பண்டங்களுக்கும், வீடு, வாசல், முற்றம், கூடம் இவற்றிற்கும் அவர் பெயரிட்டு வழங்கினார். விளம்பரப் பலகைகளிலும் எழுதித் தொங்கவிட்டார். அப்பெயரை எவ்வாறு வழங்கி யிருப்பர்?

வேலைக்காரி – அக்கா! அந்தத் திருநாவுக்கரசு எடுத்துவா அரிசி தீட்டுவோம் என்பாள் ஒருத்தி, மற்றொருத்தி – தங்கச்சி! திருநாவுக்கரசு எடுத்துவா அரிசி கொழிப்போம் என்பாள். வேலைக்காரர்கள் – அண்ணே! அந்த வெள்ளைத் திருநாவுக் கரசரைப் பால்கறந்தாயா? என்பான் ஒருவன். அடே! திருநாவுக்

கரசு! இந்தக் கன்றுத் திருநாவுக்கரசுக்கு நான் பிடுங்கி வந்த வந்த திருநாவுக்கரசை உணவு போடு என்பான் மற்றொருவன். என்ன வேடிக்கை அப்பூதி அடிகளாரின் மனைவாழ்க்கை நடை பெறுமாறு.

இந்த நிலைமையில் திருநாவுக்கரசு பெருமான் திருப் பழனத்து இறைவரை வணங்கித் திங்களூர்க்குச் செல்லும் வழியில் தண்ணீர்ப் பந்தரைக் கண்டார். அதைச் சேக்கிழார் பெருமான்

அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உறுவேனிற் பரிவகற்றிக்
குளநிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவும் நிழல்தருதண் ணீர்ப்பந்தர்'

எனச் சிறப்பித்துள்ளனர்.

விளம்பரப்பலகை பல சித்திரங்களோடு எழுதித் தொங்க விட்டிருப்பதையும் அதில் தமது திருப்பெயர் எழுதியிருப்பதை யுங் கண்டார். அவர் அடைந்த வியப்புக்கு அளவு இருக்குமா? விவரம் தெரிந்தார். அப்பூதி அடிகள் வாழ்மனை சென்றார் வாகீசப் பெருந்தகையார். ஒரு சிவனடியார் என்று கேட்ட அளவிலேயே நல்வரவேற்ற அடிகளாரை,

ஆறணியுஞ் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்என்கொல்
கூறும்எனஎதிர் மொழிந்தார் கோதில்மொழிக் கொற்றவனார்.'

(பெரிய புராணம் செய்யுள்)

அதாவது "சிவனடியார்கள் பொருட்டு நீர்வைத்த தண்ணீர்ப் பந்தரில் உம்முடைய பெயரை எழுதாது வேறு ஒருவருடைய பெயரை எழுதியதற்குக் காரணம் யாது"? என்று கேட்டார் திருநாவுக்கரசர் என்பதாம். வேறொருபேர் என்று கேட்டதும் அப்பூதி அடிகளார்க்கு வந்ததையா பெருங் கோபம். வெம்மை மொழியான் கேட்க விளம்பினீர். நீர் யாரையா? எந்த லோகத் திலிருந்து இங்குக் குதித்தீர். வேடம் சிவவேடம். எங்கள் குல தெய்வம் திருநாவுக்கரசு பெருந்தகையார். கல் புணையாகக் கடல்

கடந்த செயல் ஏழுலகும் அறியுமே! என் காது பாவம் செய்தது. என் கண் என்ன பாதகம் செய்ததோ? என்று கூறிக் கொண்டார். நீர் யார் என்ற வினவிற்குப் பதில் வருகிறது.

"............... பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினுல் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளுமுணர் வில்லாத சிறுமையேன் யானென்றூர்.

(பெரிய புராணம், செய்யுள்)

அதாவது 'சமண சமயப்படுகுழியினின்றும் ஏறும் பொருட்டு இறைவன் சூலை நோயை உண்டாக்கி ஆட்கொள்ளப் பெற்ற உணர்வில்லாத சிறுமையேன் யான்' என்று அருளிச்செய்தார் என்பதாகும். [இங்கே ஒரு காவியச் சுவை கதை அமைப்பில் அமைகிறது. பெரியபுராணம் 15 ஆம் பாடலில் ருத்திரம் (கோபச் சுவை) ததும்புகின்றது. அந்தக் கணத்திலேயே கருணைரசம் பொழிகின்றது. (17ஆம் பாடல்).] அதனைக் கேட்டவுடனே அப்பூதி அடிகளார், இரண்டு கைகளும் தலை மேலே குவிய, கண்ணீர் சொரிய, உரைதடுமாற, உடம்பெல்லாம் உரோமம் சிலிர்ப்ப நிலத்தின்மேல் விழுந்து திருநாவுக்கரசு நாயனுருடைய திருவடித் தாமரைகளைப் பூண்டார். திருநாவுக்கரசு நாயனுர் அப்பூதி அடிகளை எதிர்வணங்கி எடுத்தருளினுர்.

அப்பூதி அடிகள் மிக்க மகிழ்ச்சியடைந்து கூத்தாடினுர், பாடினுர். பின் தம் மனைவி மக்களுக்கும் சுற்றத்தார்க்கும் திருநாவுக்கரசு நாயனுர் எழுந்தருளிய நற்செய்தியைத் தெரிவித்து அவர்களை அழைத்துக்கொண்டு வந்து நாயனுரை வணங்கும்படிச் செய்தனர். அவரை உள்ளே எழுந்தருளச் செய்து அவருடைய திருவடிகளைத் தூய நீரால் விளக்கினுர். அங்ஙனஞ் செய்த தீர்த்தத்தை அவர்கள் எல்லாரும் தங்கள் மேல் தெளித்து உள்ளும் பூரித்தார்கள். அவர்க்குத் திருவமுது செய்விக்க விரும்பி வேண்டினர். அதற்கு அவர் உடன்பட்டருளினுர். அறுவகைச் சுவைபயக்கும் கறிகளுடன் இன்னமுது சமைத்தபின், வாழைக் குருத்து அரிந்து வரும் பொருட்டு வேறொரு ஆளை அனுப்பாமல் தம் மக்களில் மூத்த திருநாவுக்கரசை வாழைக் கொல்லைக்குஅனுப்பினர். எங்கள் சிவபெருமான் எண்குணங்களையுடைய நடராசப் பெருமான் திருவருளை என்

னென்பேன்! உரைதடுமாறுகிறது. நாக்குக் குழறுகிறது. நெஞ்சம் நடுங்குகிறதே. பையனைப் பாம்பு கடிக்க வேண்டுமா?

அப்பூதி அடிகளாரின் ஆழ்ந்த அடியார் பத்தியை உலகினுக்கு அறிவிக்க வேண்டும் என்ற கருத்தாலே போலும். மூத்த திருநாவுக்கரசு கொய்த குருத்தை வேகத்தோடு கொண்டு ஓடி வந்து தாயார் கையில் நீட்டிக் கீழே விழுந்து இறந்தான். அது கண்டு பெற்றோர்கள் இது தெரிந்தால் நாயனுர் திருவமுது செய்யாரே என்று பாயினுள் வைத்து வீட்டின் பின்புறம் ஒரு பக்கத்தில் மறைத்து விட்டு, நாயனுரைத் திருவமுது செய்தருள வேண்டினர். நாயனுரும் எழுந்து கைகால் கழுவிக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்தார்.

உணவுப் பண்டங்கள் அறுசுவையோடு நால்வகை உண்டிகள் படைக்கப்பட வாகீசர் உண்ண அமர்ந்து அனைவர்க்கும் திருநீறு சாத்தும்போது, 'மூத்த திருநாவுக்கரசு எங்கே? மனத்தில் ஏதோ தடுமாற்றம் நிகழ்கிறதே' எனலும், அப்பூதி அடிகளார் 'இப்போது இங்கு அவன் உதவான்' என்ருர். நிகழ்ந்த செய்தியை அறிந்தார் வாகீசர். உடனே பாயில் சுருட்டி வைக்கப்பட்ட சவம் திங்களூர்ச் சிவன்கோயில் முன் கொண்டு வரப்பட்டது. வாகீசர் சவத்தின் அருகே வந்தார். ஆண்டவனை நினைந்தார். 'ஒன்றுகொலாம்' என்னும் பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளினுர். உடனே மூத்த திருநாவுக்கரசு உயிர் பெற்று எழுந்து, திருநாவுக்கரசு நாயனுருடைய திருவடிகளிலே விழுந்து வணங்கினுன். திருநாவுக்கரசு பெருந்தகையாரும் அவர்க்குத் திருநீறு அளித்தருளினுர். தங்கள் மகன் உயிர்பெற்று எழுந்தமைக்கு அப்பூதி அடிகளாரும் அவர் மனைவியாரும் மகிழாமல் நாயனுர் திருவமுது செய்யாதிருந்தமையைக் குறித்துச் சிந்தை நொந்தனர். வாகீசர் அதனை அறிந்து அவர்களோடும் வீட்டிற் சென்று அப்பூதி அடிகளாரும் அவரது பிள்ளைகளும் உடன் இருந்து திருவமுது செய்தருளினுர். பின்னர் எங்கள் வாகீசப் பெருந்தகையார் பல தலங்களையும் வணங்கச் சென்று திருப்பழனத் திருப்பதிகத்தில் பத்தாம் பாசுரத்தில் அப்பூதி அடிகளாரைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

அப்பாசுரம் பின் வருமாறு:-

‘ வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய் கோடியையே ’

என்பதாகும். இதற்கு விளக்கம்:-

இது தலைவி தோழிக்குச் சொல்லியது என்னும் துறை அமைந்தது. தோழியே! என்னை வஞ்சித்து வளை கவர்ந்து சென்றவராகிய திருப்பழனத்து இறைவர் இதுவரை திரும்பி என்னிடம் வந்தார் இலர். அவர் வாராரே யாயினும் அப்பூதி அடிகளார்க்குத் தலையிற் சூடும் பூவாக இருக்கும் திருப் பழனத்து இறைவரது திருவடியில் ஆராய்ந்து இடும் மலர்களில் ஒதுக்கிய மலர்களையேனும் நான் பெறச் செய்வாயாக என்பது இப்பாடலின் கருத்து.

விளக்கம்:-

வஞ்சித்து என்வளை கவர்ந்தான்— காமுற்ற மகளிர்க்கு வளை கழலல், குழல் சரிதல், முதலிய மெய்ப்பாடுகள் நிகழ்வன வாகக் கூறப்படுதலின் தலைவனைக் கண்டு வளை கழலப்பெற்ற தலைவி தன்னை அறியாமலே வளை கழலச் செய்தமை, ‘வஞ்சித்து வளை கவர்ந்தான்’ என்று கூறப்படுகிறது. இதே கருத்தைக் குமரகுருபர அடிகளார்,

‘ வலங்கொண்ட மழுவுடையீர் வளைகொண்டு
விற்பீர்போல் மதுரை மூதூர்க்
குலங்கொண்ட பெய்வளையார் கைவளையெல்
லாங்கொள்ளை கொள்கின் றீராற்
பலங்கொண்ட செட்டுமக்குப் பலித்ததுநன்
றுனீரிப் பாவை மார்க்குப்
பொலங்கொண்ட வரிவளைகள் விற்பதற்கோ
கொள்வதற்கோ புறப்பட் டீரே. ’

என்று நயம்படக் கூறுதல் இங்கு அறியத் தக்கது.

பஞ்சிக்கால் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான் – திருப்பழனம் மருத நிலத்தைச் சார்ந்த திருத்தலம். பஞ்சி போன்ற கால்களையும் சிறகுகளையும் உடைய அன்னப் பறவைகள் மிக்கு ஆரவாரிக்கும் பழனம் என்றார். பஞ்சி என்ற சொல் பேச்சு வழக்கில் பஞ்சு என்று வழங்கும். அது அன்னத் தின் காலுக்கு மென்மைத் தன்மையாலும் சிறகுக்கு நிறத்தி னாலும் உவமை கூறப்படுகிறது. ஆதலின் பஞ்சிக்காற் சிற கன்னம் என்றதற்கு, பஞ்சுபோன்ற மெல்லிய காலையும் வெண் மையாகிய சிறகையும் உடைய அன்னம் எனப்பொருள் கொள்க.

அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி—

அப்பூதி அடிகளார் அந்தணர் ஆதலாலும், அந்தணர்க் குரிய அறுதொழிலில் வேள்வி செய்தல் ஒன்று ஆதலானும் அழலோம்பும் அப்பூதி என்றார். அந்தணர் வேள்வி செய்தல் - உரிய காலத்தில் மழை பெய்வித்து உலகிற்கு நன்மை நாடு தலின் கலி அஞ்சிப் போய் மெலிய 'அழலோம்பும் அப்பூதி' என்றார். (கலி—வறுமைத்துன்பம்) இதே கருத்து நமது சம்பந்தப் பெருமான் திருவாக்கில் "கற்றாங்கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்" என வருதல் காண்க.

அப்பூதி அடிகளார் சிவவெருமானது திருவடியைச் சிரசிற் சூடிக்கொள்வர். (திருவடியில் தமது முடிபடும்படி வணங்குவர்) என்னும் கருத்தால் அப்பூதி குஞ்சிப் பூவாய் நின்ற சேவடி என்னப்பட்டது. இதே கருத்து சிலப்பதிகாரத்தில்,

ஆடக மாடத் தறிதுயி லமர்ந்தோன்
சேடங் கொண்டு சிலர்நின் றேத்தத்
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி யணிமணிப் புயத்துத்
தாங்கின னாகித் தகைமையிற் செல்வுழி.

(சிலப்-வஞ்சிக்காண்டம், கால்கோட் காதை, அடிகள் 62-67) எனச் சேரன் செங்குட்டுவன் கூறப்படுதல் அறியத்தக்கது.

பாசுரத்தின் இறுதித் தொடரை, சேவடி + ஆய் + கோடு + இயை எனப் பிரிக்கவேண்டும். சேவடி ஆய் கோடு – என்றதற்கு சேவடியில் சூடும் மலர்களில் ஆராய்ந்து ஒதுக்கப் பட்டவை என்று கொள்ள வேண்டும். அதைத் தவிர வேறு பொருள் கொள்ள பாசுரம் இடந்தரவில்லை. கோடு என்பது தகாதது (நேர் இல்லாதது) என்னும் பொருளில் வரும் ஒருசொல். அது திருக்குறளில்,

‘கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல்’ எனவும்,

‘முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்’

எனவும் வரும் திருக்குறளாலும் அறியத் தக்கது.

இயை – நான் அடையும்படி இயைவிப்பாயாக என்பது பொருள்.

வாரானே யாயிடினும் அவன் சேவடிக்குச் சூட்டுவதற்கு ஆயும் மலர்களில் ஒதுக்கிய வற்றை யேனும் எனக்குக் கொணர்ந்து தருவாயாக என்று வினைமுடிபு கொள்க.

இலக்கணக் குறிப்பு:—

தோழியே—என்பது சொல்லெச்சம்.

பஞ்சிக்கால்—உவமைத் தொகை.

சேவடி—பண்புத் தொகை.

ஆய் கோடு—வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகை.

நலிய அழலோம்பும்—நலிய என்னும் செயவினை யெச்சம் காரியப் பொருட்டில் வந்தது.

அப்பூதி குஞ்சிப் பூவாய் நின்ற சேவடி என்பது விட்ட இலக்கணை.

கோடு இயை—பகுதியே நின்று ஏவற்பொருள் உணர்த் திற்று. இங்குப் பிறவினை விகுதி தொக்கு நின்றது.

அப்பூதி அடிகளார் திருநாவுக்கரசு பெருந்தகையாருடைய திருவடிகளை வணங்குதலே தமக்குப் பெரும் பேறு எனக் கொண்டு வாழ்ந்திருந்து சில காலஞ் சென்ற பின் திருத்தில்லை மன்றுள் ஆடும் நவ்வியாங் கண்ணுள் பங்கர் நற்கழல் நண்ணினார்.

அப்பூதி அடிகள் நாயனார் புராணத்தால் அறியத் தக்க சில குறிப்புக்கள் :—

(1) ஒரு நாயனார் பெயரைச் சொல்லியும் எழுதியும் ஒருவர் சிவனடி சேர்ந்தனர் என்பதற்கு எடுத்துக் காட்டு.

(2) இவ்வாறு செய்து வருவதைப் பிறர் நகையாடுவாரே யென்று அதனைப் பொருட்படுத்தாமை "நாணது வொழிந்து நாடவர் பழித்துரை, பூணுதுவாகக் கோணுதலின்றி" என்ற திருவாசகம் போற்றித் திருவகவல் அடிகளின்படி நிலைமை குன்றா திருந்தனர்.

(3) அவரது வேலையாட்களும் குடும்பத்தினரும் இதைப் பற்றி யொழுகி வந்தமையும் குறிப்பிடத் தக்கது.

(4) இவர் அந்தணர். நாயனார் வேளாளர். எனினும் நாயனார் திருவடிகளைக் கழுவிய நீரைத் தமருடன் தாமும் தலை மேற்றெளித்து அருந்துதலும் செய்தனர்.

(5) வாழைக்குருத்து அறுத்து வரும் புண்ணியமும் தங்களுக்கே ஆக எனத் தம் மகனை அனுப்பிவைத்தார்.

(6) இறந்த மகனையும் பொருட்படுத்தாது அடியாரை உணவூட்டலே குறிக்கோளாகக் கொண்டதும் இவரது ஒப்பற்ற அடியார் பத்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

(7) வாழைக்குருத்து இரண்டு தடுக்குகளை உடையது. மெல்லியது ஒன்று. வலியது ஒன்று. இலையின் அடிப்பாகம் வலதுகைப் பக்கம் இருந்தால் தான் உணவு பிசைந் துண்ணுங் கால் கிழியாமல் இருக்கும். இதனைச் சேக்கிழார் சுவாமிகள் நினைவுறுத்தினர். பிறவும் இது கொண்டறிக.

தாயுமானவரின் — பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

7

Nothing is greater than Lord Siva, the Supreme power to the true devotees of unbiased mind· The staunch faith in him makes them feel proud and fearless to all the worldly threats. As they are the servants of their unique master, they are not subjects to anybody. They care not for the ephemeral pleasures. They fear not even death. In the words of Sekkilar such devotees are the real heroes worth the name. In the same strain, we can take the following couplet also, as the heroic statement of our poet-Saint Thayumanavar.

கண்ணாவா ரேனுமுனைக் கைகுவியா ராயினந்த
மண்ணாவார் நட்பை மதியேன் பராபரமே!

(பொ-உரை) எனது இருவிழிகளுக்கு ஒப்பானவரேனும் உம்மைக் கரங்குவித்து வணங்காதவர்கள் என்றால், அவர்களது பயனற்ற நட்பை ஒரு பொருட்டாகவே மதியேன்.

Oh.......Lord Supreme! I respect not the friendship of those, who do not clasp their hands with reverence and homage before you, however dear and indispensable, their friendship may be to me as my very eyes.

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri· K· G. S. Arts College, Arulnandi Nagar.

திருப்பனந்தாளில்
ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி கோயிலில்
பிரதோஷக் கட்டளை நிதி ரூ. 3000/-

'இமிழ்திரை முற்றத்து மேருமத் தார்த்து
முள்எயிறுகு நச்சுப் பணுடவித் தாப்பிசைத்து
இறுக இறுக்கித் துழாய்முடித் தீர்த்தனொடு
எவரும் மதித்துப் பராபவத் தீச்சுட
அமுது செய்வித்திட்ட போனகத்தால் சுடர்
அடரும் இருட்டுக் கிரீவமட் டாக்கிய
அழகிய சொக்கர்' எனவும்,

'நம்பா நினக் கோலம் முறையோ எனக்கால
நஞ்சுண்டு பித்துண்டு நாந்தேவர் என்பார்
தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த
தயவாளர்'

என்றும் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் பாடியருளிய வண்ணம் பாற் கடலைக் கடைந்த காலத்தில் ஆலகாலம் என்னும் நஞ்செழ, "நம்பா நினக்கு ஓலம்" என்று தேவர்கள் முறையிடத் தேவரும் பிறரும் உய்யும் வண்ணம் சிவபெருமான் அந்நஞ்சையுண்ட திரயோதசி நாள் ரஜினி முகவேளை (மஞ்சள் வெயில் படும் வேளை ஆகிய பிரதோஷ காலத்தில் திருப்பனந்தாள் ஸ்ரீ அருண ஜடேசுவர சுவாமிக்குப் பிரதோஷ பூசை நடத்துவித்தற் பொருட்டு இத்தருமம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றது. இது 'திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரர் கோயிலில் பிரதோஷக் கட்டளை நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய சேமவைப்பு ரூ. 3000/- (ரூபா மூன்றாயிரம்) இது ஆண்டொன்றுக்கு 3% வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யப் பெற்றுள்ளது.

3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946- சர்க்கார் கடன் பத்திரம் எண் சிஏ. 243548 – ரூ. 2000/- சிஏ. 243684 – ரூ. 1000/- ஆக ரூ. 3000/- இது நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர் களாலும் பரிபாலிக்கப்பெற்று வரும்.

3. திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான 27 தேவஸ்தானங்களில் ஒன்றுகத் திகழ்வதும், திருஞானசம்பந்தரால் 'கண்பொலி நெற்றியினுன்' என்ற பதிகம் பெற்றதுமான திருப்பனந்தாள் திருத்தாடகையீச்சரத்து எழுந் தருளியுள்ள ஸ்ரீ அருணஜடேசுவரர் ஆகிய சிவலிங்கப் பெரு மானுக்குப் பக்ஷந்தோறும் நடத்துவிக்கப்பெறும் பிரதோஷ கால பூசைச் செலவுக்கென இச்சேமவைப்பினின்று கிடைக்கும் வட்டித் தொகை பயன் படுத்தப்பெறும்.

4. வட்டி வரவுக்கு ஏற்ப இப்பிரதோஷ கால பூசைத் தொகை குறைக்கவும் கூட்டவும் பெறும்.

5. இவ்வட்டி வருமானம் வேறு எம்முறையிலும் மாற்றி யமைக்கப் பெற மாட்டது. இம்முதற்பொருள் நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும். இச் சேமவைப்பு திருப்பியளிக்கப்பெறின் அதிக வட்டிதரக் கூடிய அரசியல் கடன் தாள்களில் மீண்டும் முதலீடு செய்யப் பெற்று வரும்.

'எவ்விடத்தில் எப்பொருளும் ஒருங்குண்ண இருக்குநீ
வெவ்விடத்தை எடுத்தமுது செய்ததுமோர் வியப்பாமே'
–குமரகுருபரர்.

Tirupanandal
Dated 1–1–1964. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur Sub-Registrar's office as No. 2 of 1964 of Book 4 volume 50 pages 249 to 251 dated 4-1-64.